[பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்]

இஃது

1157
3.17

# இஸ்லாத்தின் மகிமை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 SEP 1
MADRAS

---

அஷ்ஷைகுகாமில் அல்ஆரிபு பில்லாஹி ஹஜறத்து
ஹாஜி மொன்னு முஹம்மது காதிரி ஷுத்தாரீ
யவர்கள் குமாரரும்,

சென்னை "முஸ்லிம் கல்வி விருத்திச் சங்கத்" தலைவர்
களிலொருவரும்,
"லிவாவுல் இஸ்லாம்" பத்திராதிபருமாகிய

ஹஜறத்து மவ்லவி ஹாஜி
ஷைகுமீருன் முஹ்யித்தீன் ஸாஹிபு
அவர்களால் கோர்வை செய்யப்பட்டு

தமது
இஸ்லாமிய்யாப் புஸ்தகசாலை
முஹம்மதிய்யாப் பிரசில்
பதிப்பிக்கப்பட்டது.

---

சென்னை 1917 ஜுலை

இதன் விலை, ... ... ... அணா 5.

All Registered Copy-right.

# 1-வது அதிகாரம்.

## இஸ்லாத்தின் மகிமையைப்பற்றியுள்ள சில ஆயத்து, ஹதீது, ஹிக்காயத்து வகைராக்கள்.

THE REGISTRAR OF
26 SEP 1917
MADRAS.

---

திருக் குர்ஆன்ஷரீப் 3-வது ஜூஸ்வு 10-வது ருக்கூவு 'அல்லாஹூத் தஆலாவிடத்தில் கபுல் செய்யப்பட்ட மார்க்கம் இஸ்லாமா யிருக்கு' மென்று அல்லாஹூத் தஆலா திருவுளம் பற்றி யிருக்கிறான்.

இன்னும் குர்ஆன் ஷரீப், 10-வது ஜூஸ்வு, 11-வது ருக்கூவிலும், 26-வது ஜூஸ்வு, 12-வது ருக்கூவிலும், 28-வது ஜூஸ்வு, 9-வது ருக்கூவிலும், "தீனுல் இஸ்லாம் என்கிற மார்க்கத்திற்கு வேற்றுமையான மார்க்கங்கள் அடங்கலைப் பார்க்கிலும் இவ்விஸ்லாம் மார்க்கமே மேலானதாகவும், ஜெயமுள்ளதாகவும், உண்மையான வழியைக்கொண்டு நேர்வழி காட்டுகின்ற இக்குர்ஆன் ஷரீபைக்கொண்டும், தவ்ஹீதைக் கொண்டும், அஜீஸாத்தென்கிற அநேக அற்புதங்களைக் கொண்டும், நாமே யாத்திரை செய்து அனுப்பி வைத்தோமென்று அல்லாஹூத் தஆலா திருவுளம்பற்றி யிருக்கிறான்.

இன்னும் மேற்படி குர்ஆன்ஷரீப் 1-வது ஜூஸ்வு 16-வது ருக்கூவில் "மெய்யாக அல்லாஹூத் தஆலா உங்களுக்குபரிசுத்தமாகிய இஸ்லாமை தெரிந்து தந்தான். ஆனால் நீங்கள் அந்த மார்க்கப்படி நடந்து முஸ்லிமாயிருக்கிற ஹாலிலே யொழியமவுத்தாகவேண்டா" மென்று திருவுளமா யிருக்கிறான்.

இன்னும் குற்ஆன் ஷரீப் 6-வது ஜூஸ்வு, 5-வது ருக்கூவில் "இஸ்லாமென்கிற மார்க்கத்தை உங்களுக்கு மார்க்கமாக பொருந்தி, உங்கள்மீது என்னுடைய நிஅமத்தை தமாமாக்கி, உங்கள் மார்க்கத்தை இன்று நிரப்பமாக்கினேன்" என்று திருவுளம் பற்றி யிருக்கிறான்.

இன்னும் குற்ஆன் ஷரீப் 8-வது ஜூஸ்வு, 2-வது ருக்கூவில், "யாரொருத்தனை நாம் நல்வழி காட்டி நற்கதி சேர்க்க நாடுவோமானல் அம்மனிதன் இருதயம் தீனுல் இஸ்லாம் என்கிற மார்க்க

த்தை விசுவாசித்து ஒப்புக்கொண்டு நடக்கும்படி அவன் நெஞ்சை விரிவாக்கிவைப்போம், என்னையும் என்னுடைய ரஸூலையும் ஈமான்கொள்ளாமலிருக்கிற அவிசுவாசிகளான ஜனங்களின்பேரில் கியாமத்தில் வேதனையையும், துன்யாவில் முனிவையும் ஆக்கிவைப்போம். ஆஎன் ஹபீபாகிய ரஸூலே நீரிருக்கின்றமார்க்கமாகிறது உம்முடைய றப்பாகிய அல்லாஹுத் தஆலாவின் செம்மையாகிய நல்மார்க்கமாக இருக்கின்றது. நல்லுறுதி பெருகின்ற ஜனங்களுக்கு அதில் அநேக அத்தாக்ஷிகளை பயான் செய்திருக்கிறோம். அவர்களுக்கு நம்மிடத்தில் தாருஸ்ஸலாம் என்கிறசுவர்க்கம் உண்டாகியிருக்கிறது" என்று அல்லாஹுத் தஆலா திருவுளமாகி யிருக்கிறான்.

இன்னும் 13-வது ஜுஸ்ஸு 7-வது ருக்கூவில் அருளியிருக்கிறதாவது:—"நாம்யாருடைய நெஞ்சை இஸ்லாம்மார்க்க தளவில் விரிவாக்கிவைத்து, அவன் நேர்வழிபெற்றால் அம்மனிதன் தன் றப்பிலின்றும் பெற்றுக்கொண்ட ஒளிவின்பேரிலா யிருப்பான்."

இன்னும் குர்ஆன் ஷரீப் 28-வது ஜுஸ்வு 9-வது ருக்கூவில் அருளப்பட்டிருக்கிற தாவது:—"யாரொருவனை மெய்யாக தீனுல் இஸ்லாமென்கிற மார்க்கத்தில் அழைக்கும்போது அதை அநுசரியாமல் அல்லாஹுத் தஆலாவுக்கு இணைவைக்கிறது கொண்டும் அவனுக்கு பிள்ளையுமுண்டென்ற சொல்லி, அவன் ஆயத்துகளையும் நபிமார்களுக்கு கொடுக்கப்பட்ட முஅஜிசாத்துகளையும், மந்திரம் சூனியம் என்றுசொல்லி அல்லாஹுத் தஆலாவின்பேரில் பொய்யாகிய கருமங்களையும், இல்லாத செய்கைகளையும் இட்டுண்டாக்கி உற்பத்தி செய்கிறானே அவனைவிட துரோகியும், அனியாயக்காரனும் யாருமில்லை. அப்பேர்க்கொத்த காரியங்களைச் சொல்லி காபிரானயஹூதி முஷ்ரிக்கு முதலியகூட்டத்தாரை அல்லாஹுத் தஆலாநேர்வழி காட்டி நற்கதி சேர்க்கமாட்டான்."

இன்னும் குர்ஆன் ஷரீப் 4-வது ஜுஸ்வு 2-வது ருக்கூவில் "ஓ! என் ஹபிபாகிய முஹம்மது நபியின் உம்மத்துகளே! அந்த நபியின் கொள்கையை விசுவாசித்தவர்களை தொடர்ந்து நன்மையைக்கொண்டு ஏவி, தீமையைக்கொண்டு விலக்கி, நேர்வழியில் நடக்கிற மூமீன்களை லவ்ஹுல் மஹ்பூல் என்னும் பலகையிலும் ஏற்றமான கூட்டங்களென்று எழுதி யிருக்கிறோம். மனிதர்

களுக்கு உபகாரமாய் வெளிப்பட்டிருக்கிற உம்மத்துகளிலெல்லாம் நீங்கள் மிகவும்ஏற்றமான உம்மத்துகளானவர்களென்று அல்லாஹுத் தஆலா திருவுளம்பற்றி யிருக்கிறான்.

இன்னும் குர்ஆன் ஷரீப் 2-வது ஜுஸ்வு, 1-வது ருக்கூவில் "ஓ! உம்மத்து முஹம்மதீ உங்களுக்கு நேரான வழியைக்காட்டியதுபோல் உங்களுடைய ரஸூல் உங்களுக்கு ஷாஹிதாகவும், நீங்கள் மற்றுமுள்ள உம்மத்துகளுக்கு சாக்ஷியாகவும் இருப்பதற்காக உங்களை உம்மத்துகளில் நடுவாக்கினோம்" என்று அல்லாஹுத் தஆலா திருவுளம்பற்றினான்.

இன்னும் 3-வது ஜுஸ்ஸு 17-வது ருக்கூவில் "யாராவது இஸ்லாமார்க்கத்தை தவிர மற்றவேறு மார்க்கத்தை அவனுக்கு மார்க்கமாக தேடுவானானால் அவனினின்றும் ஒன்றையும் ஏற்றுக்கொள்ளாமல் அவன் ஆகிரகத்தில் நஷ்டவானாவா" னென்று திருவுளமா யிருக்கிறான்.

தப்ஸீர், றூஹுல் பயான் முதலிய கிதாபுகளில் வருகிறதாவது:—

"ஹஜ்ரத்து நபிகள்நாயகம் முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்களுக்கு சங்கையாகிய தீனுல் இஸ்லாமாகிய சன்மார்க்கத்தை அருளியபோது, அவர்கள் தங்கள்ஜனங்களை அழைத்து ஓ! பந்துஜனங்களாகிய முர்றத்தின் கூட்டங்களே! ஹனுஹாசிம்களே! பனுமுத்தலிபுகளே! என் புத்திரசிகாமணியாகிய பாத்திமாவே நீங்கள் யாவரும் தீனுல் இஸ்லாமென்னும் சன்மார்க்கத்தில் சேராவிட்டால் உங்களுக்கு நேரிடும் சகல கஷ்டஅதாபுகளை தட்டி விலக்க யாராலும்முடியாது. ஆதலால் நீங்கள் எல்லோரும் தீனுல் இஸ்லாம் என்னும் சன்மார்க்கத்தில் சேர்ந்து உங்கள் ஜடலங்களை நரகத்தைவிட்டுங் காப்பாற்றிக்கொள்ளுங்களென்றும், யாராவதுசிறந்த சங்கையான உயர்ந்தகுறை ஷிவம்ஸத்தினரா யிருந்தாலும்சரி அவன் தீனுல் இஸ்லாமில் சேராவிட்டால், நரகவாதியாவான் தாழ்ந்தஹபஷி புழுக்கையா யிருந்தாலும்சரி அவன் தீனுல்இஸ்லாமில் சேர்ந்தால் அவன் சொர்க்கவாதியாவான் என்றுஹஜரத்து நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள்."

ரிவாயத்து:—ஹஜரத் இமாம் ஷைகு நஸ்றுபுனு முஹம்மதி புனு இபுராஹீம் சமர்கந்தி அவர்களுக்குரிய தன்பீஹுல் காபிலீன் என்கிற கிதாபில் சொல்லப்படுகிறதாவது,—"ஹலறத்து செய்யிதினு மூஸா அலைஹிஸ்லாம் அவர்களுக்கு தௌறாத்து வேதத்தை கொடுக்கப்பட்டபோது, அவ்வேதம் எழுதப்பட்டிருந்த பலகைகளைப் பார்த்து வருகையில், சில உம்மத்துகளென்னும் கூட்டத்தாரின் சரித்திர நடப்புகள் அதிக புகழாயும்; சங்கையாயும், நல்ல வர்ணிப்பாயும் இருக்கிறதைக் கண்டார்கள்.

"யாறப்பு என்னைப்படைத்தவனே! இந்த தௌறாத்து வேதத்தில் சில விடங்களில் ஓர் கூட்டத்தாரை மிக்க புகழ்ச்சியாயும், வரிசையாயும் கண்டிருக்கிறதே அவர்களின் விஷயம் மன்றுடுகிறவர்களென்றும்; மன்றுட்டம் கொடுக்கப்பட்டவர்களென்றும்; ஐந்து நேரத்துத் தொழுகைகள் அவர்கள் பிழைகளுக்குத் தெண்ட குற்றமாயிருக்குமென்றும்; ஒற்றைக் கண்ணனான தஜ்ஜாலுள்பட வழிகேட்டையுடையவர்க ளடங்கலையும் சங்காரம் செய்து கொள்வார்களென்றும்; தண்ணீரைகொண்டும் மண்ணைக் கொண்டும் அவர்கள் வணக்கத்திற்குத் துப்புரவு உண்டாகுமென்றும்; சக்காத்து முதல்களை நெருப்பிலிட்டுச் சுட்டுக் கருக்கும்படியாயிருக்க அவர்கள் சக்காத்து முதலை வாங்கிப் புசிக்கிறதாகுமென்றும்; அவர்களில் ஒருவன் ஓர் நன்மையை மனதில் நாடினால் ஓர் நன்மையை எழுதப்படுமென்றும்; அதை நாடினது போற் செய்தால் பத்துமுதல் எழுநூறும் அதற்கதிகமும் எழுதப்படுமென்றும்; தின்மையை ஊசாடினால் ஒன்றும் எழுதப்படாதென்றும்; செய்தால் ஒரு குற்றம் எழுதப்படுமென்றும் அவர்களில் எழுபதினாயிரம் பெயர் கேள்வி கணக்கில்லாமல் சுவர்க்கம் புகுதுவார்களென்றும்; நன்மையைக் கொண்டேவி, தீமையை விட்டுவிடுகிற நிமித்தியம் அவர்கள் எல்லா உம்மத்துகளிலும் ஏற்றமாயிருக்குமென்றும்; துனியாவில் எல்லா நபிமார்களின் உம்மத்துகளுக்கும் கடைசியில் வெளியாகி ஆகிரத்தில் எல்லாம் உமத்துகளைக் காணச் சுவர்க்கத் தளவில் முந்துவார்களென்றும், வேதம் நெஞ்சுகளில் மனப்பாடமா யிருக்குமென்றும் எழுதப்பட்டிருக்கிறதே! இந்தக் கூட்டங்கள்யார்? அவர்களை என்னுடைய உம்மத்துகளாக்கி வைத்தருள் என்று பலதடவை கேட்டார்கள்.

"அந்தந்த இடங்களில் அவர்கள் உம்முடைய உம்மத்தல்ல, உமக்கும் பின் வருகின்ற உம்மீ என்கிற மனிதர்கள் எவரிட மிருந்தும், அறிவு கற்காது என் மூலமாய் அறிவுகற்ற அஹ்மது முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் உம்மத்து களாயிருக்குமென்று அல்லாஹுத் தஆலா அறிவித்ததற்கு, ஆச்சரியப்பட்டு நாமாவது அந்த சங்கையான சிறப்புப்பெற்ற உம்மத்திலாவோ மென்றெண்ணினார்கள்.

"உடனே ஒ மூஸாவே! உம்மை அந்த ஜனங்களைக்காண என்கலாமைக்கொண்டும் றிசாலத்தைக்கொண்டும், உம்மை நான் தெரிந்துகொண்டமையால் உமக்கு நான் கொடுத்ததை உறுதி யாய்ப் பிடித்து ஷுகூறு செய்தவராயிருமென்றும், உம்மு டைய உம்மத்துகளில் ஒரு கூட்டம் ஹக்கென்னும் நேர்வழியில் தரித்து நீதமாய் நடந்து மற்றவர்களையும் நேர்வழி காட்டுகின்ற உம்மத்துகளுண்டென்றும், அல்லாஹுத்தஆலா வஹியறிவித் தான். அதைக்கொண்டு ஹசரத்து மூஸா அலைஹிஸலாமவர்கள் பொருத்தமாகினார்கள்.

"இன்னும் எந்த இடத்தில் ஹஜறத்து நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் உம்மத் துகள் தௌபாச் செய்தாலும் கபூலச் செய்யப்படும். என்னு டைய தௌபா திருமக்கா ஷரீபைக்கொண்டு சொந்தமாகிவிட்ட தென்று ஹசரத்துபாவா ஆதம் அலைஹிவா ஸல்லமவர்கள் திரு வுளமாகி, இந்த உம்மத்தை புகழந்தார்கள்,

ஹிக்காயத்து:—ஹஜரத் ஷைகு ஸைனுத்தீன் இபுனி அப் துல் அஸீஸ் அவர்களுக்குரிய "இறுஷாதுல் இபாது" என்கிற கிதாபில் சொல்லப்படுகிறதாவது:—

"ஹஜரத் இமாம் முஹம்மது இபுனு இதிரீஸ்ஷாபியீ றஹி மஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். நான் திருமக்கா ஷரீபி லிருக்கும்போது நசாறாக்களினின்றும் அஸ்பக் கென்றொரு மனி தனைக் கஃபாவில் தவாபு செய்யக்கண்டு, உன்னுடைய பிதாக் களின் மார்க்கத்தைவிட்டு நீங்கி, எங்கள் மார்க்கத்திற்கு திரும் பியதற்கு காரணமென்ன வென்றதற்கு அவர், என் பிதாக்களின் மார்க்கத்தைப் பார்க்கிலும் இவ்விஸ்லாம் மார்கத்தை மேன்மை யாகக் கண்டேன், அதேனெனில், நானும் இன்னும் சிலரு

மாகக் கப்பலில் யாத்திரைப் போகிறகாலத்தில் கப்பலுடைந்து விட்டது. அதினின்று எனக்கொரு பலகை கிடைத்து அதிலே றிக்கொண்டேன். அப்பலகையை அலைகள், கடலின் தீவுகளி லொன்றில் சேர்த்துவிட்டது. அப்போதந்தப் பலகையை விட் டுக் கீழிறங்கி அந்த தீவினுட் புகுந்து சுற்றிப்பார்க்கும்பொழுது தேனிலும் மதுரமாகவும் வெண்ணெயிலும் மிருதுவாகவு முள்ள கனிகளையுடைய அனேக மரங்களையும், தெளிந்த நீரினுந் தெளி வாகிய தண்ணீரையுடைய ஆறுகளையும், சுனைகளையும் பார்த்து ஆண்டவனைப் புகழ்ந்து அக்கனிகளைப்புசித்து அந்நீரையு மரு ந்தி, நமது ஊருக்கு பிரயாணப்படுகிற நாம் வருகிறமட்டிலுமிரு ந்து காலங் கழிக்கலாமென்றெண்ணி அதில் தரித்தேன்.

"அப்படியிருக்க சூரியன் அஸ்தமித்து இரவு வந்தவுடன் காட்டின் ஜவா மிருகங்களின் தீங்கை பயந்து ஓர் மரத்தின் மே லேறி யுட்கார்ந்து கொஞ்சம் தூங்கினேன். நடுயிரவானவுடனே ஓர் மிருகத்தைத் தண்ணீரில் "லாயிலாஹ இல்லல்லாஹுல் கப் பார், முஹம்மதுற் றசூலுல்லாஹின் நபியுல் முகுத்தார்" இதன் பொருள் "பிழை பொறுக்கும்படியான அல்லாஹுத் தஆலா வைத் தவிர வேறே நாயனில்லை; முஹம்மது நபி ஸல்லல்லா ஹு அலைஹிவஸல்லமவர்கள் அல்லாஹுத் தஆலாவின் தெரிவு தலாக்க பட்ட நபியாகிய திருதூதரா யிருக்கிறார்கள்" என்பதே இக்கலிமாவை நாகரீகமான பாஷையால் சொல்லி தஸ்பீஹ் செய்ததாக வரக்கண்டேன். அம்மிருகம் கரைக்கு வந்து சேர்ந்த வுடனே அதைப்பார்த்தேன். அதின் தலை தீக்குருவியின் தலை யைப்போலவும், அதின்முகம் மனிதனின் முகத்தைப்போலவும், அதின் காலுகள் ஒட்டகையின் காலுகளைப்போலவும், அதின் வால் மீன்வாலைப்போலவுமிருந்தது.

"அம்மிருகம் நம்மை ஏதாவது தீங்கு செய்யுமென்று பயந் து மரத்தைவிட்டு கீழிறங்கி வெருண்டோடினேன். அப்போது அம்மிருகம் என்னைப்பார்த்து நில்நிற்காவிட்டால் நாசமடைவாய் என்றது. அப்பவே நின்றேன். நிற்கவும் உன்மார்க்கம் எது வென்க என்மார்க்கம் நசாறுவின் மார்க்கமென்று சொன்னேன். அப்போது ஓய் நஷ்டவாளனே! உனக்கென்னகேடு! ஹக்கைச் சேர்ந்த மார்க்கத்தள்வில் சேர்ந்துக்கொள்; ஏனெனில் நீமுமீனு கிய ஜின்கள் குடியிருக்கும் ஸ்தானத்தில் வந்திறங்கி யிருக்கிறு

யென்றது, அப்போது அந்த இஸ்லாம் மார்க்க மெப்படி என்று கேட்டேன்.

"அதர்க்கு அம்மிருகமானது என்னைப் பார்த்து அல்லாஹுத் தஆலா ஒரு நாயன் மெய்யானவன் ; அவனுக்குச் சரியானவனொருவனு மில்லையென்றும், முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸல்லமவர்கள் அல்லாஹுத் தஆலவின் படைப்புகளில் அதிமேன்மையும் சிறப்பும் பெற்ற திருத்தூதரா யிருக்கிறார்களென்றும், அவர்கள் கொண்டுவந்த மார்க்கம் மெய்யென்று விசுவாசங்கொண்டு "அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு; வஅஷ்ஹது அன்ன முஹம்மதுர் றசூலுல்லாஹி" யென்கிற கலிமாவை சொல்லுமென்று சொன்னது. அக்கலிமாவைச் சொல்லி உடனே நான் இஸ்லா மார்க்கத்திலாயினேன். அப்போது உமக்கு இந்த தலத்திலிருக்கப் பிரியமாயிருக்கிறதா அல்லது உம்முடைய ஊருக்குப்போகப் பிரியமிருக்கிறதா என்றது. அப்போது நான் ஊருக்குப்போகப் பிரியமுடையனு யிருக்கிறேனென்றேன்.

"அதற்க்கு அம்மிருகமானது ஓர் கப்பல் வருமளவும் இத் தலத்திலிருமென்று சொல்லி கடலிலிறங்கிக் கொஞ்ச தூரத்திற் போய் யென்கண்ணுக்குத் தெரியும்படி நின்றது. அதன் பின்னொரு கப்பல் வரக்கண்டு, ஓர்மேட்டிலேறி வெள்ளைவீசினேன் அதை அந்த கப்பற்காரன் கண்டு என் சமீபம் வந்து என்னை கப்பலினுள் தூக்கிகொண்டு சென்று என் வரலாறுகளை கேட்டார்கள். நான் துவக்கமுதற் கடைசிவரை நடந்த வர்த்தமானங்களைச் சொன்னேன். அப்பவே அக்கப்பலிலிருந்த நசாருக்களென்னும் கிறீஸ்து வரடங்களிலு மிதைக்கேட்டுத் தற்சணமே இஸ்லாத்திலானார்கள். இவ்விதமான காரணத்தால் தீனுல் இஸ்லாமே சன்மார்க்கமென்று உறுதிக்கொண்டு நான் இம்மார்க்த்திலாயினேனென்று சொன்னார்."

ஹிகாயத்து: "தன்பீஹுல் காபிலீன்" என்கிற கிதாபில் ஹலறத்து இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களைக்குறித்து ஹஜரத் இமாம் அபுல்லைது சமர்க்கந்தி றகிமஹுல்லா அவர்கள் எழுதிவருகிறதாவது:—

"ஷாம் தேசத்திலோர் யஹூதியான தேர்ந்த அறிவாளன் தங்களுக்கு விசேஷநாளான சனிகழமையன்று தன் மூதாதை

கள் ஆதிகாலத்து பெட்டகத்திற் பூட்டி வைத்திருந்த தௌராத்து வேதத்தைத் திறந்து எடுத்து ஓதி வரும்போது, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களின் வர்ணிப்பும்புகழ்ச்சியும்நான்கு எல்லைகளிலும் வரக்கண்ட உடனே பொறுமைக்கொண்டு, பொறி கலங்கி புத்தி கெட்டு, வர்ணிப்புகளும், வஸ்துகளிலுமிருந்த கடிதங்களை, நமது நபீமூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக்காண அவர் உயர்த்தியாவென்று நறுக்கித் தீயிலிட்டான், மறு சனிக்கிழமையன்று முன்போல ஓதிக்கொண்டு வரும்போது எட்டு இடத்திற்கண்டு நறுக்கிதீயிலிட்டான் மூன்றாவது சனிக்கிழமையன்று பனிரெண்டு இடத்திற்கண்டு தன்னுற்றானே ஆலோசித்து நாம் இனிமேல் மாறுபாடு செய்தால் பிந்திஇந்த தௌராத்து வேதமடங்கலும் இந்த நபியவர்களின் வர்ணிப்பாயிருக்க நாம் கண்டாலென்ன செய்லாமென்று நினைத்து நறுக்காமல்தன் சினேகிதரிடத்தில் வந்து முஹம்மது யாரா யிருக்குமென்று கேட்டார்.

"அவர் பொய்பராயிருக்கும் அவரை நீர் பார்க்கிறதைக் காணபாராமலிருக்கிறது நலமென்று மற்றவம்பர்கள் சொல்லயாருந்தடை செய்யவேண்டாம் தௌராத் வேதத்தின் பேரிலாணையாக அந்த சிறப்புற்றோங்கிய நபியவர்களை நான்கண்டு கொள்ளத்தான்வேண்டுமென்று சொல்லி அவர்தன் வாகனத்திலேறி இரவும்பகலுமாய் நடந்து திருமதீனமா நகரத்திற்கருகே வந்து சல்மானுல் பாரிஸிறலியல்லாஹு அவர்களைக் கண்டார். அவர்கள்முக வசீகரத்தையுஞ் சவுந்தரியத்தையும் உடையவர்களாயிருந்தமையால்தாங்கள் தானுமுஹம்மதுஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமென்று கேட்டார். அப்போது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் உபாத்தாகி றப்பின் சமுகஞ் சென்றுமூன்றுநாளா யிருந்தபடியால் சல்மானுல் பாரிசிறலியல்லாஹு அன்ஹு அவர்கள் அழுதுக் கொண்டு நான் அவர்களின் தொண்டு ஊழியனுகிய அப்தாயிருக்கு மென்றார்கள். அதைக்கேட்டவர் அந்த நாயகம் எவ்விடத்திலிருக்கிறார்களென நபிநாயகமவர்கள் உபாத்தாகி விட்டார்களென்றால் இவர் தன்னூருக்குத் திரும்பி விடுவார் அவர்கள் ஹாயாத்தா யிருக்கிறார்களென்றால் நமது சொல் பொய்யாகிவிடுமே என்று சல்மானுல் பாரிசிறலியல்லாஹு அன்ஹு அவர்களாலோசித்து என்னுடனே வாரும் அவர்

களின் அஸ்ஹாபிகளிடத்தி லும்மைக் கொண்டு போய்விடுகி றேனெனச் சொல்லி அழைத்துப் பள்ளியிற்கொண்டுபோய் விட்டார்கள்.

"அந்நேரம் அஸ்ஹாபுக ளெல்லாம் சலிப்புற்றவர்களாயும் வியாகூலமடைந்தவர்களாயும் இருக்கையில் இவர் போனவுட னே நபிநாயகமவர்கள் அச்சபையிலிருப்பார்க ளென்றெண்ணி அஸ்ஸலாமு அலைக்கும்யா நபியுல்லா என்றுசொன்னார். நபிய வர்களின் திருநாமங்கேட்டவுடனே சஹபாக்கள் சப்தமிட்டழு துக்கொண்டு நீர்யாராயிருக்கும் எங்களின்ரணங்களையும் கல்பின் புண்களையும் புதிதாக்கிவைத்து விட்டீரே அன்னிய தேசத்தரா யிருக்குமோ எங்கள் நாயகம் உபாத்தாகி மூன்றுதினமாச்சுது இதை அறியீரோ வென்றார்கள் அதைக் கேட்டமாத்திரமே இவர்தன் ஆரபாரங்கொண்டு அபயஸ்தமிட்டழுது என் சலிப் பேஎன் சபர்பமுதான துக்கமே என்தாய் என்னை பெருதிருந்தா ளில்லையே பெற்றாலும் தௌறுத்து வேதத்தை நான் ஓதாதிருந் தேனில்லையே ஓதினாலும் அந்த மாட்சிமைதங்கிய முஹம்மதுநபி யவர்களின் மகிமையை அவ்வேதத்தில் காணாதிருந்தேனில்லை யே அந்த வர்னிப்பையும் வஸபுகளையும் அதில்கண்டும் அவர் களைநான் எனதுகண்குளிரக் காணவேண்டிய திருந்ததே அது எனக்கு கொடுத்து வைக்கவில்லையே என்று கவலையுற்றவராய் இங்கே அந்நபியின் வர்ணிப்பை யெனக்கு சொல்வதற்காக அலி என்பவர் உண்டோவென்று கேட்கஆமென்று அலிய்யுன் றலி யல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். உடனே நானு களின்நாமத்தை தௌறுத்து வேதத்திற் கண்டிருக்கிறேனென னார். அப்பால் நபிநாயகம் அவர்களின் லட்சணங்களையும் குணங் குறிகளைக் குறித்தும் ஹஜரத்து அலிரலியல்லாஹு அன்ஹு அவருக்கு சொன்னார்கள்.

"அதற்கு அவர் அந்த நாயகத்தின் லக்ஷணங்களை தௌராத் துவேதத்தில் கண்டிருக்கிறேன் அவர்களணிந்த ஆடைகளினின் றும் ஓர் புடவையுண்டோ அதை நான் கண்ணில்வைத்து முகந் துக்கொள்ள வேண்டுமென அப்பிரகாரம்! அவர்ளின் ஜுப்பா வை முத்தி இஸ்லாமாயினர்."

ஹிகாயத்து: "தஸ்வியத்துல் அவது" என்னும் கிதாபில் சொல்லப்படுகிறதாவது:—ஹஜரத் மாலிக்கிபுனுதீனர் றகிமகுல்லா அவர்களுடைய காலத்தில் நெருப்பை வணங்குகிற மஜூசிக் காபிர்களில் இரண்டு பெயர் தமையன்தம்பி யிருந்தார்கள். அவ்விரண்டு பெரிலொருவன் நெருப்பை 70-வருஷ காலமாக வணங்கினன் மற்றொருவன் 35-வருஷகாலமாக வணங்கினன் அப்பால் இளையவன் தமையனைப் பார்த்து, நாம் நீண்டகாலமாக நெருப்பை வணங்கிக்கொண்டு வருகிறோமே, அதன் பலன் வெளியாகவில்லையே, ஆதலின் இந்நெருப்பை வணங்காதவர்களை சுடுவதுபோல நம்மையுஞ்சுடுமா சுடாதாவென்று இதை பரிசோதிப்போமென்றுசொல்லத் தமையன் நீதான் இந்த யோசனையில் முந்தினவன் உன்கையைத்தான் நெருப்பில் வைத்துப் பாரென்று சொன்ன பின்பு அதை ஒப்புக்கொண்டு இளையவன் ததமயன் முன்னிலையில் நெருப்பில் கையை வைக்க கைவெந்து போய்விட்டது.

"அப்பவே இளையவன் வீண்வேலையாய் இந்த நெருப்பை வணங்கி காலமெல்லாம் போக்கினேமே யென்று கைசேதப்பட்டு முஹம்மது நபிஸல்லல்லாகு அலைஹிவஸல்லம் அவர்களுடைய தீனுல் இஸ்லாம் மார்க்கத்திலாகி விடுவோமென்று தமையனுக்குச் சொல்ல; தமையன் எனக்கு மிகவும் வயதாகி விட்டது. ஜனங்கள் என்னை கேவலமாகப்பேசுவார்கள், நீதானே அம்மார்க்கத்திலாகிவிடு நான் வருகிறதில்லையென்று சொல்லிவிட்டான். பின்பு இளையவன் தமையனை தூஷணிதுவிட்டு ஹஜரத் மாலிக்கிபுனுதீனர் றகிமஹுல்லா அவர்களிடம்போய் இச்செய்தி யாவற்றையுஞ் சொல்லித்தீன் இஸ்லாமார்க்கத்தில் தானும் தன் பெண்ஜாதி பிள்ளைகளும் சேர்ந்துவிட்டார்கள்.

"அப்பாலவர்கள் மார்க்க விதிகளை இவருக்குப் படித்துக் கொடுத்ததின்பின் உம்முடைய ஜீவனத்திற்காக காலச்சேபங் கழிக்கிறதற்காக கொஞ்சம் பணங்காசு என் முரீதுப் பிள்ளைகளிடஞ் சொல்லிச் சேகரித்துத் தருகிறேனென்று சொல்ல அவர் நான் துன்யாவுக்குப் பகரமாக மார்க்கத்தை விற்கமாட்டேனென்று சொல்லி வேறே யொரு ஊரில்போய் ஒரு பாழ் வீட்டில் தன் மனைவியையும் பிள்ளைகளையும் வைத்து விட்டு,

தெருவில் வந்து கூலிவேலைக்கு ஆள் தேவையாவென்று சத்த மிட்டு பார்த்ததில், ஒருவரும் வேலைக்கழைக்கவில்லை. அப்பால் பள்ளிவாசலில் வந்து மகுரிபுவரை தொழுதுவிட்டு வீட்டுக்கு வந்ததில் பெண்சாதி ஓ சீவனமெங்கே யென்று கேட்க, நானொ ரு எஜமானுக்கு வேலைசெய்தேன். கூலி கேட்காமல் வந்து விட் டேனென்று சொன்னார். அன்றிரவை இவர்களெல்லோரும் புசிப்பின்றி பசியுடன் கழித்தார்கள். மறுநாள் முன்போலவே தெருவிற்சுற்றி பார்த்ததில் வேலைக்கிடைக்காமல் பள்ளிவாசலில் வந்து மகுரிபுவரை தொழுது கொண்டிருந்து விட்டு வீட்டுக்கு வந்ததில், பெண்ஜாதி கூலியெங்கே யென்றுகேட்க, நேற்றையக் கூலியும் இன்றையக்கூலியும் நம் எஜமான் நாளைக்கு ஒன்று சேர் த்துதருவானென்று சொன்னார். எல்லோரும் முந்தின நாளைப் போல புசிப்பின்றி பசியுடன் ஆண்டவனை சுக்கூர்செய்துக்கொ ண்டு இரவை கடத்தினார்கள். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை யிலெழுந்திருந்து முன்போல தெருவைச்சுற்றிப் பார்த்ததில் வேலைகிடைக்காமல் பள்ளிவாசலில் வந்துதொழுது கொண்டிருந் தார். ஜும்ஆவின் நேரத்தில் கைகளை ஏநதி, ஆண்டவனே தீன் இஸ்லாம் மார்க்கத்தின் பறக்கத்தாலும், இந்த வெள்ளிக்கிழமை யின் பறக்கத்தாலும், என் பெண்ஜாதி பிள்ளைகள் புதிய இஸ்லா மாக இருப்பதால் பிள்ளைகளொருவேளை மார்க்கத்தை விட்டு பசியினுடைய கொடூரத்தால நீங்கிவிடாமல் இம்மார்க்கத்தில் நிலைத்திருக்கும்படி அவர்களின் பசிநீங்கும் பொருட்டாயவர்க ளுக்கு இரணம் கொடுவென்று துஆச் செய்துவிட்டு மகுரிபுவ ரை தொழுது முடித்த பின்னர், கொஞ்சம் மணலைவாரித் துணி யிற் கட்டிக்கொண்டு பெண்ஜாதி கேட்டால் இதைப்பாருமெ ன்று சொல்லாமென்கிற எண்ணத்தோடு திரும்பி வீட்டை அடுத் ததும், வீட்டினின்று புகை வருகிறதைப் பார்த்து மணலை கட்டு டன் வாசலின்தானே வைத்துவிட்டு வீட்டினுள் சென்று மனைவி யைப்பார்த்து புகையெழும்புவதேன் என்று கேட்டார்.

"அப்போது தன்மனைவி சொன்னதாவது:—ஜும்ஆ நேரத் தில் ஒரு வாலிபன் ஒரு தாம்பாளத்தில் ஆயிரம் தங்கக்காசை வைத்து அழகான சரிகைலேஞ்சியால் மூடி என்னிடம் கொண்டு வந்து தந்து உன்புருஷன் அல்லாகுத் தஆலாவுக்காக இன்றைய னம் செய்த இபாதத்தின் கூலி துன்யாவிலிதுவா யிருக்கு

மென்றும், இதற்கு முன்னிரண்டுநாள் அல்லாகுத் தஆலாவுக் காக செய்த அமலின் கூலி இனிமேல் கொடுக்கப்படு மென்றும் சொல்லிவிட்டு போய்விட்டார் பின்பு அதிலொருகாசையெடுத்து கடையிலொரு நசாருயிடத்தில் கொடுத்தேன் அதையந்த நசு ராணி தூக்கி நிறைபார்த்ததில் இரண்டு காசினிடை யிருந்தது. அதைப் பார்த்து அவனுச்சரியப்பட்டு இக்காசு உனக்கேது என்று கேட்க, நடந்த செய்தியைச் சொன்னேன் உடனே அக் காசின் முத்திரையைப் பார்த்தான். "லாயிலாஹி இல்லல் லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி" என்றெழுதப் பட்டிருந் தது அதைப்பார்த்த அம்மனிதன் தீனுல் இஸ்லாமாகிவிட்டார் அதில் வொருகாசுக் காயிரங்காசு தந்தார். அதில் ஒருகாசையெ டுத்துஅரிசி, கறிவாங்கி சமைத்துக் கொண்டிருக்கிறே னென்று சொன்னாள்"

"அத்தனையும் அவர்கேட்டு அல்லாஹுத் தஆலாவை மிக வும்புகழ்ந்து சஜதாஷுக்கூர் செய்தார் பின்பு துணியில் நீங்கள் கட்டிக்கொண்டுவந்த தென்னவென்று கேட்க அவர் அதை எடு த்துப்பார் என்றுசொன்னார் அவளதை அவிழ்த்துப் பார்க்கக் கோதுமை மாவாக இருந்தது உடனே யாவர்களும் அல்லா ஹுத் தஆலாவை அதிகமாய் புகழ்ந்து தீனுல் இஸ்லாத்தின் பேரில் ஷுக்கூர் செய்தார்கள்.

## 2-ம் அதிகாரம்.

### எழுபதுனுயிரம்பேர் இஸ்லாமானது.

ஹிகாயத்து: "முக்தஸறு ரவனக்குல் மஜாலிஸு" என்னும் கிதாபில் சொல்லப்படுகிறதாவது:—"ஹஜரத்து காலிது இபுனு வலீது ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் அவர்களோடு சில சஹபாக்களும் "ஷாம்"தேசத்து சண்டைசெய்துவிட்டு ஊருக்கு (திருமதீனு முனவ்வறுவுக்கு) திரும்பி வருகிறவழியில் ஓர் தானத் தில் இறங்கி யிருக்கும்போது மேற்படி காலிது ரலியல்லாஹு அன்ஹு ஒரு ஹாஜத்துக்காக நாடிவேறொரு இடத்திற்கு அவர்கள் மாத்திரம் போய் திரும்பிவந்து பார்க்கையில் அவ ருடன்கூட வந்திருந்தவர்களெல்லாம் போய் விட்டிருக்ககண்டு தான் திகைத்து அவர்களை தேடுகிறதர்காக ஓர் மலையினுச்சி யில் ஏறினார்கள் அங்கு ஏறி பார்க்கும்போது வேறொரு மலை யினுடைய உச்சியில் அதிக திரளான ஜனங்களிருக்க கண்டு

அவர்களிடம் இவர்கள் சென்று அவர்களின் ஹாலை விசாரித்ததில் அத்திரளான ஜனங்கள் நாங்கள் நசுரூணி மார்க்கத்தி லுள்ளவர்கள் இம்மலையில் ஓர் பெரிய ஞானோபதேதியார் இருக்கிறார் அவர் வருஷத்திற்கொருதடவை வெளியாகுவார் அப்போது ஜனங்களுக்கு அவர் நல்லுபதேசம் சொல்லுவார். அவ்வுபதேசத்தைக் கேட்டு நாங்கள் ஒரு வருஷம் வரை நடந்துவருவோம். அப்பால் மறுவருஷமானதும்மறுபடியும்பிரசங்கம்கேழ்க்க வருவோம் இப்படியே எங்களுக்கு வழக்கமாகையால் இவ்வருஷம் மேற்படி பிரசங்கத்தைக்கேட்க இப்போது இங்கு 70ஆயிரம் பேர் வந்திருக்கிறோம் என சொல்லக்கேட்டு ஹஜரத்காலிது ரலியல்லாஹூ அன்ஹூ அவர்களும் அந்த வுபதேசத்தைக் கேட்டுக்கொண்டு போகலாமென அவர்களுள் தாமும் ஒருவராய் தங்கலானார்கள்.

“இதன் பின்னர் மேற்படி ஞானோபதேசிகரான பாதிரியார் அவருடைய ஆரவாரத்துடன் அச்சபையில்வந்து தோன்றவே எல்லாரும் அவருக்கெழுந்து நின்று மரியாதை செய்தார்கள் அப்போது மேற்படி பாதிரியார் இன்று நான் உங்களுக்கு பிரசங்கம் செய்யமுடியாது உங்களில் ஒரு முஸ்லிமான ஒருவர் குடியிருக்கிறார் என்று சொன்னவுடன் அவர்கள் எல்லோரும் ஹஜரத் காலிது ரலியல்லாஹூ அன்ஹூவை தேடிகொல்ல முயன்றதில் இவர்களும் மேற்படி நசுருக்கள் போலவே பேச்சு வார்த்தைகளில் ஒற்றுமையாயிருந்ததால் கண்டு பிடிக்க ஏலாமலிருந்தது மேற்படி பாதிரியார் நீங்களெல்லோரும் சும்மாயிருங்கள் அவரைக்கொல்ல முயலாதேயுங்கள் என்று சொல்லி ஓ முஸ்லிமான மனிதனே! உம்முடைய மார்க்கத்தின் பேரில் சத்தியமாக நீர் எழுந்து நில்லும். என்று சொன்னவுடன் ஹஜரத்தவர்கள் நாம் எழுந்திருந்தால் இவர்கள் நம்மை கொன்று விடுவார்கள் என்று கருதி சும்மா யிருந்து விட்டார்கள் மறுபடியும் முன்போலவே பாதிரியார் சொன்னார் அப்போது ஹஜரத்தவர்கள் தன் உயிரை ஆண்டவனுக்காக செலவு செய்வேன் என்று துணிந்து எழுந்து நின்றார்கள்.

“ அப்பொழுது பாதிரியார் தன்னுடைய அருகையில் ஹஜரத்தவர்களை அழைத்து சொன்னதாவது உங்களில் நீர் அறி

வில் சிறந்தவரா அல்லது உம்மைவிட அறிவில் சிறந்தவர்கள் உண்டா? என்று கேட்டனர். அதற்கு என்னைவிட அறிவில் சிறந்தவர்களும் உண்டு அதில் தாழ்ந்தவர்களும் உண்டு நானே இரண்டுக்குக்கும் மத்திபமாகுமென்றார்கள் அதற்கு பாதிரியார் நான் சில கேள்விகள் கேட்பதற்கு பதிற்சொல்லக் கூடுமா என்றதற்கு ஹஜரத்தவர்கள், தெரிந்தமட்டில் சொல்லுவேன் என்றவுடன் பாதிரியார் பின்வருமாறு கேள்விகளைகேட்டார்.

“பாதிரியார் கேள்வி:—சொர்க்கத்தில் படைக்கப்பட்டிருக்கிறவை அடங்கலுக்கும் உலகத்தில் உவமையுண்டாகி யிருக்கிறதா? ஹஜரத்தவர்கள் (விடை) ஆம் உண்டாயிருக்கிறது.

“பாதிரி கேள்வி:—சொர்க்கத்தில் தூபா என்கிற மரமொன்று உண்டாகி யிருக்கிறதென்றும், அதின் மூடு ஒன்றுதானென்றும் அதன் பனர்களோ சொர்க்கத்திலுள்ள சகல மாளிகைகளிலும் ஒவ்வோர் மாளிகைச்கு ஒவ்வோர் பனர் உண்டாகி யிருக்கிறதென்றும் அந்தந்த மாளிகையி லுள்ளவர்கள் தாங்கள்நாடிய கனியை பறித்து தின்பார்களென்றும் உங்கள் நபி சொல்லியிருக்கிறார்களே மூடு ஒன்றாயிருந்து அதன் பனர்கள் ஒவ்வொரு மாளிகைகளிலும் நுழைந்திருக்கிறதென்றால் அது புத்திக்கும் சித்திக்கும் ஏற்றுகொள்ளவில்லையே அதற்கு உலகத்தில் உவமையுண்டாயிருக்கிறதா?

“ஹஜாத் விடை:—ஆம் மெய்தான் அதற்கு உலகத்தில் உவமையுண்டு. சூரியனே ஒன்றாயிருக்கிறது. அது உதயமாகி மத்தியில் வந்தவுடன் உலகத்திலுள்ள மேடு, பள்ளம், குற்று, குழி, கெபி முதலியவற்றிலும் அதி வெயில் உண்டாகி யிருக்கிறதல்லவா! என்றார்கள்.

“பாதிரி கேள்வி:—சொர்க்கத்தில மதுஆறு, தேன்ஆறு, பால்ஆறு, நீர்ஆறு ஆக நாலு ஆறு இருக்கிறதென்றும், அந்த நாலு ஆறும் ஓரே இடத்திலிருந்து புறப்படுகிறதென்றும் அது நாலு பாகமாக பிரிந்து வெளிப்படுகிறதென்றும் அந்நான்கின் நிறம், சுவை, ருசி வெவ்வேறாயிருக்கிறதென்றும் உங்கள் நபி சொல்லியிருக்கிறார்களே ஒருவஸ்து ஓரேதானத்திலிருந்து புறப்படுகிறது அது நாலுவிதமாக காணப்படுகிறது என்பது புத்திக்குப் புலப்படுமோ? அதற்கு உலகத்தில் உவமையுண்டா?

"ஹஜரத் விடை:—ஆம் மெய்தான் அதற்கு உவமை யுண்டாகியிருக்கிறது மனிதனின் காதிலும், கண்ணிலும், நாசியிலும், வாயிலும் நாலுவிதமான நீர் புறப்படுகிறது இந்த நாலு நீர்களின் நிறம் சுவை, ருசி வெவ்வேருயிருக்கிறது இந்நான்கும் புறப்படுகிறது. ஒரே தானமாகிய மூளையிலிருந்தல்லவா! என்ருர்கள்.

"பாதிரி கேள்வி:—சொர்க்கத்தில் ஆகாயத்தில் ஒரு கட்டி லுண்டென்றும், அதில் ஏறும்போது அதுவளையு மென்றும், ஏறினவுடன் அது நிமிர்ந்து விடுமென்றும் அதைவிட்டு அவன் இறங்கும்போது அப்படியே அக்கட்டில் வளைந்து கொடுக்கு மென்றும் உங்கள் ந ? சொல்லியிருக்கிருர்களல்லவா? அது புத்திக்கு பொருந்தக்கூடியதா அதற்கு உலகத்தில் உவமையுண்டா?

"ஹஜரத் விடை:—ஆம் மெய்தான் அதற்கு உலகத்தில் உவமையுண்டு ஒட்டகையை பார்க்கவில்லையா! அது மூக்கணாங் கயிற்றை சிறு குழந்தைகள் பிடித்தால் அது தரையோடு அதின் தலையைத் தாழ்த்திகொடுக்க பிள்ளைகள் அதில் ஏறிக்கொள்ளுகிறது இறங்கும்போது அது அப்படியே செய்ய பிள்ளைகள் இறங்கிவிடுகிறதல்லவா இன்னும் ஹஜரத் சுலைமான் நபியவர்களுக்கு காற்றின் மூலமாய் நடக்கிறவளமையுண்டு அதை கண்ணல் பார்த்தவுடன் கீழே இறங்கும் அதில் ஏறிக்கொண்டால் மேலே உயர்ந்துவிடும் அதை விட்டிறங்கும்போது இதுபோலவே யிருக்கும் என்கிற சரித்திரத்தை நீங்கள் வாசிக்கவில்லையா? என்ருர்கள்.

"பாதிரி கேள்வி:—சொர்க்கத்திலுள்ளவர்கள் தாங்கள் நாடிய வஸ்துக்களை அருந்துவார்கள் அப்பாராக்கைவிட்டு நீங்கார்கள் ஆனல் அதற்கு மலஜலம் கிடையாதென்று நபியவர்கள் சொல்லி யிருக்கிருர்க ளல்லவா? அது புத்திக்கு பொருந்துமா? அதற்கு உலகத்தில் உவமையுண்டா?

"ஹஜரத் விடை:—ஆம் மெய்தான் அதற்கு உலகத்தில் உவமையுண்டு தாயின் கர்ப்பத்தில் தரிப்பட்ட நாலு மாசத்திற்கு மேற்பட்டுள்ள சிசுக்கள் யாதொரு வஸ்துவை இச்சிக்கும்போதெல்லாம் அல்லாஹுத் தஆலா அந்த வஸ்துவை தின்னும்படி அதின் தாய்க்கு இச்சையைக் கொடுக்கிருன் அத்தாய் அதை

அருந்தினவுடன் அப்பிள்ளை அதின் ரசத்தை சிசுவைத்து அப்பராக்கைவிட்டு நீங்காமலிருக்கிறது அதற்கு மலம்ஜலம் கிடையாதல்லவா ? என்றார்கள்.

"பின்னும் சில கேள்விகளைக் கேட்க பாதிரியார் துணிந்தார் அப்போது ஹஜரத் காலிது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாங்கள் நாலுகேள்வி கேட்டீர்கள், அதற்கு நான் ஜவாபு சொன்னே னல்லவா ? இப்போது நான் ஒரு கேள்வி கேட்கிறேன் அதற்கு தாங்கள் ஜவாபு சொல்ல வேண்டும் என்று சொன்னதற்கு நல்லது சொல்லு மென்றனர்.

"ஹஜரத் கேள்வி:—நீர் சொர்க்கத்தைபற்றியே கேட்டீரல்லவா? அச்சொர்க்க லோகத்தின் திறவுகோல் எது ?

"பாதிரி விடை:—ஈஸா, மரியம் இருவர்களும் சொர்க்கத்திற்கு திறவுகோலாயிருக்குமென்றார்.

"ஹஜரத் வினு:—மேற்படி இருவர்கள் பேரிலும் சத்தியமாக நீர் உண்மையைச் சொல்லும் சொர்க்கத்தின் திறவுகோல் எது?

"பாதிரி விடை:—நான் மேற்சொல்லிய சத்தியத்திற்கு கட்டுப்பட்டு உம்முடைய உயிரை பெரிதாகப் பாராமல் சத்தியத்தையே பெரிதாக கருதி நான்தான் முஸ்லிம் என்று இம்மகா சபையில் மனந்துணிந்து எழுந்து நின்றீரல்லவா? இப்போது நீர் நம்மோடு சத்தியமாக சொர்க்கத்தின் திறவுகோலை சொல்லும்படி சொல்லுகிறீரல்லவா? ஆனல் நானும் சத்தியத்தையே பெரிதாக்கி உண்மையைச்சொல்லுகிறேன் சொர்க்கத்தின் திறவுகோல் "லாயிலாஹ இல்லல்லாஹு, முஹம்மதுர் றசூலுல்லாஹி" என்கிற திருகலிமாவாயிருக்குமென்று சொன்னர்.

உடனே எல்லோர்களும் உண்மை வெளியான பிறகு அதற்கு தவறி நடக்கிறது மூடத்தனமென்று கருதி மேற்படி எழுபதினயிரம் பேர்களும் சொர்க்கத்தின் திறவுகோலாகிய மேற்படி திருக்கலிமாவை மொழிந்து முஸ்லிமாகிவிட்டார்கள்.

## ஒரு லட்சம் பேர் இஸ்லாமானது.

ஹிதாயத்து:—ஐரோப்பாவிலுள்ள பர்ஸூபியா பட்டணத்தில் 1906ஹு டிசம்பர்மீ த்தில் "ஷேக் சயீதுத்தீன்" என்கிற ஷேக் ஒருவர் ஈஸாயிகள் என்கிற கிறிஸ்துவர்களின் பெருங்கூட்டத்தினடுவே இஸ்லா மார்க்கத்தினுடைய சிறப்பையும் புகழ்ச்சியையும் மகிழ்ச்சியையும் பற்றி பிரசங்கஞ் செய்துகொண்டு வரும்போது அங்குள்ள சில பிரதான ஈசாயிகளெல்லாம் கூடி ஷை ஷேக்கவர்களிடம் நீங்கள் இஸ்லா மார்க்கத்தைப்பற்றி போதிக்கிறீர்கள் போதித்து வருகிறது எங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. ஆயினும் ஒருவன் இஸ்லா மார்க்கத்தைத் தழுவினுல் அவன் செய்யவேண்டிய வேலைகளையும் அவ்வேலைகளிலுள்ள இகபர நன்மைகளையும் பற்றி எடுத்து விவரிக்கவேணுமென்று கேட்டார்கள். அதற்கு ஷை ஷேக்கவர்கள் ஆம் என்று ஒப்புக்கொண்டு பின் வருமாறு பிரசங்கஞ் செய்தார்கள் அப்பிரசங்கத்தை அவர்களெல்லாம் கேட்டு இஸ்லா மார்க்க ஞாயங்களை சரியானதென்று கருதி சுமார் லக்ஷம் ஜனங்கள் வரை இஸ்லாமாய் விட்டார்கள். இதைக் காஸான் முக்பரீ என்னும் ருஷிய முஸ்லிம் பத்திரிகையினின்று மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றது.

ஷை ஷேக்கவர்களின் பிரசங்கமாவது:—

யாதொருவன் பரிசுத்த சத்திய இஸ்லா மார்க்கத்திலாக வேண்டுமானுல் முதலாவதாக அவன் திருக்கலிமாவை பூரண விசுவாசத்துடன் ஓதி சகல வணக்கங்களும் புகழ்களும் நம்மைப் படைத்த சர்வவல்லமையுள்ள அல்லாஹுத்தஆலா ஒருவனுக்கே முஹம்மது நபியவர்கள் இஞ்ஞானத்தை நமக்கு போதிக்க வந்த அவனுடைய திருத்தூதரா யிருக்குமென்றும் மனதில் விசுவாசித்து அப்பிரகாரம் வாயினுல் மொழியவேண்டும் இவ்விசுவாசத் தோடேயே அவன் ஆயுசு அளவும் ஒரு அணுவளவும் தவருமல் விசுவாசித்துக் கொண்டு வந்து இவ்விசுவாசத்தோடே அவன் மரண மடையவேண்டும். அப்பொழுது தானவன் இவ்வுலகிலும் அவ்வுலகிலும் முஸ்லிமானவனென்று ஏற்றுக் கொள்ளப்படுவான். இவனையே மெய் சுவிவாசியான மூமினென்றும்

சொல்லப்படும். இவ்விதம் கலிமாமொழிந்தவுடன் அவன் இவ்வுலகத்தில் முஸ்லிமானவனென்று அழைக்கப்படுவான்; இவ்விதம் ஒருவன்மேற் சொன்ன பிரகாரம் விசுவாசித்து இஸ்லாமாய் விட்டால் அவன்பேரில் இஸ்லாமார்க்கத்தினுடைய விதிவிலக்குகளை எடுத்து நடக்கவேண்டியது அவன்பேரில் கடமையாய் விட்டது. இவ்விதி விலக்குப்பிரகாரம் நடந்தவனை மூமுன்காமிலென்றும் அவ்விதி விலக்குகளை மெய்யானவைகளென்று ஏற்றுக்கொண்டு அவைகளில் சிலதை பொடுபொக்காய்ச் செய்யாமலிருந்தால் அவனை மூமின்நாகிஸ்என்று சொல்லப்படும் அல்லாஹு தஆலாவால் அல்லது நபிநாயகமவர்களால் ஏவல் செய்யப்பட்டவைகளை யாராவது இங்கார்செய்தாலும் அல்லது அவர்களால் விலக்கப்பட்டதை ஹலால் தேடினாலும் அவன் முர்தத்தானுன் யஅனி மார்க்கத்தை விட்டு நீங்கிவிட்டானென்று அழைக்கப்படுவான்.

ஹஸரத் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் இஸ்லாமை 5-காரியத்தினின்று மெடுக்கப் பட்டிருக்கிறது என்று திருவுளமாயிருக்கிறார்கள் ஒன்றுவது கலிமாச் சொல்லுகிறது. இரண்டாவது எப்போதும் நிலையாக தொழுதுவருகிறது. மூன்றுவது வருஷத்திற்கொருதடவை அதின் ஷறுத்துப்படி சக்காத்து கொடுக்கிறது. நாலாவது ரம்லானமாசம் அடங்கலும் நோன்புவைக்கிறது. ஐந்தாவது திருமக்காவுக்குப்போக திராணிபெற்றவர்கள் ஆயிசிலொருதரம் திருமக்காவுக்கு சென்று ஹஜ்ஜிசெய்கிறது. ஆக இவ்வைந்தும் இஸ்லாத்திற்கு பிரதானமா யிருக்கின்றன.

ஒன்றுவது பற்லுகலிமா:—இது "அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு, வஅஷ்ஹது அனமுஹம்மதர் ரசூலுல்லாஹி" என்று வாக்குமனமும் ஒத்து மொழிவதோடு உண்மையாக வணக்கத்திற்கு பாத்திரவான் அல்லாஹுத் தஆலாவைத் தவிர யாருமில்லையென்றும் முஹம்மது நபியவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய திருத்தூதராயிருக்குமென்றும் பிசகற அறிந்துநான் சாக்ஷி சொல்லுகிறேன் என்று முழுவிசுவாசத்துடன் ஆயுசில் ஒருதரம் ஆரம்பத்தில் மொழியவேண்டும். இவ் விசுவாசத்தோடேயே சகல விதிவிலக்கான வேலைகளையும் செய்து கடைசியில் இவ்விசுவாசத்துடனேயே மரணமடைய வேண்டுமென்பதே.

இரண்டாவது பர்லு தொழுகை:-யாதொருவன்மேற்சொன்ன விதமாக கலிமாச்சொல்லி இஸ்லாமானவுடன் இரண்டாவது பர்லாக அவன்பேரில் தொழுகை விதியாகிறது. இத்தொழுகையை நாளொன்றுக்கு ஐந்துவேளை குறிக்கப்பட்ட ஷறுத்துபடி குறிக்கப்பட்ட நேரத்தில் தன்னுயுசு தரையிலும் எந்த விதமாயினும் தன் நிலைமைக்கு தகுந்தபடி தொழுது வரவேண்டும். இத்தொழுகையோஎல்லாவணக்கங்களிலும்மேலானதாயிருக்கிறது. இத்தொழுகையைப்போல் மஹா சிறந்த வணக்கம் எதுவும் கிடையாது. ஏனென்றால் வணக்கமென்பது சொல், செயல், உவும் இம்மூன்றிலொன்றை சம்பந்தப்பட்டதாயிருக்கின்றது. இத்தொழுகையானது இம்மூன்றுஞ் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது எப்படியென்றால் தொழுகையில் நிற்க ஆரம்பிக்கும்போது ஆண்டவனே மஹா பெரியவனென்றும் அவனையே சாஷ்டாங்கஞ் செய்கிறேனென்றும் அவனே சகல வணக்கத்திற்கும் புகழிற்கும் பாத்தியப்பட்டவனென்றும் மஹா பூரணவிசுவாசத்துடன் "அல்லாஹு அக்பர்" என்று வாயால் மொழிவதோடு தன்னிரண்டு கைகளையும் இருகாது வரையும் உயர்த்தி அவ்விசுவாசச் சொல்லுடன் தொப்புளிற்குக் கீழ்கட்டிக்கொள்ளுகிறான். இதில் சொல் செயல், உளம், இம்மூன்றிலுள்ள வணக்கங்களும் புகுந்துவிட்டது. இப்படியே ஒவ்வொரு செயலிலும் சொல், செயல், உளம் இம்மூன்றும் பொதிந்ததா யிருக்கிறது. வணக்கங்களானது நிலையில் அல்லது இருப்பில் அல்லது குனிதலில் அல்லது தலையை கீழேவைத்து பின்பக்கத்தை உயர்த்துதலா யிருக்கின்றன. இவை யடங்கலும் இந்தத் தொழுகையிபுகுந்திருக்கின்றது. ஒருவன் மேற்சொன்ன பிரகாரம் முதலாவதுநிலையில் நிற்கிறான். அப்பால் தன் பின் தட்டும் தலையும் ஒரே சமமாகும்படிகுனிந்துக் கொள்கிறான். அப்பால் மறுபடியும் நிமிர்ந்துக் கொள்ளுகிறான் அப்பால் தன் தலையை கீழே வைத்து பின் தட்டையுயர்த்தி ஆண்டவனுக்கு சாஷ்டாங்கஞ்செய்கிறான். அப்பால் நிமிர்ந்து இருப்பிலிருக்கிறான். இதில் ஒவ்வொரு வேலைகளிலும் ஒவ்வொரு விதமாக செயலாலும், சொல்லாலும் உளத்தாலும் ஒரே நினைவுடன் பலவாறாக அந்தந்த இடத்தில் குறிப்பிட்ட பிரகாரம் ஆண்டவனைத் துதிசெய்கிறான். இந்தப்படி ஒருவன் ஆண்டவனை வணங்கினால் ஆண்ட

வனுக்கு இவனைப்போல் தொண்டு செய்கிறவன் யாருங் கிடையாது. ஆண்டவன் எல்லாப் படைப்புகளையும் மனுவுக்காகப் படைத்தான் மனுவை படைத்தான் தன்னை வணங்க என்கிற வாக்கியப் பிரகாரம் இவன் ஆண்டவனுக்குத் தொண்டு செய்கிறதைப்போல் சிலாக்கியமான காரியம் யாதொன்றும் கிடையாது. இதில் சொல், செயல், உளம் இம்மூன்றும் ஒன்றுபட்டு அல்லாஹுத் தஆலா மஹா பெரியவன்; அவனுக்கே சகல வணக்கமும் புகழும்; அவனே ரட்சிப்புக்கர்த்தா; உன்னையே வணங்குகிறேன், துதிக்கிறேன் என்று பலவாறாய்ப் புகழ்ந்து சாஷ்டாங்கஞ் செய்கிறதைவிட சிலாக்கியமான காரியம் யாதொன்றும் கிடையாது. இவ்வணக்கத்தினால் மனிதனுடைய பாவங்களெல்லாம் பொறுக்கப்பட்டு ஆண்டவனுக்கு இவனைப் போல தொண்டன் யாருமில்லை என்று ஏற்படுகின்றது.

மூன்றாவது பர்லு சக்காத்து:—மனிதனுடைய சகலவிதமான உலகநடைகளும் பொருளைக் கொண்டாயிருக்கிறது. எப்போது பொருளை விட்டு மனிதனுடைய ஆசையை வெறுத்து அதை ஆண்டவனுக்காக தன் முதலினின்றும் அதன் ஷறுத்துப்படி 40-ல் ஒண்ணு வருஷத்திற்கொருதடவை குறிக்கப்பட்ட ஆட்களுக்கு பங்கிடுகிறான். இதனால் அவன் மனதிலுள்ள பண ஆசையை வெறுத்து அந்த பணத்தை ஆண்டவனுக்காக சிலவிடுகிறதால் இவன் ஆண்டவனுக்கு தொண்டு செய்கிறவனாயும் அவன் தயவை பெற்றுகொள்கிறவனாயும் ஆய்விடுகிறான்.

நான்காவது பர்லு நோன்பு:—இது கிழக்கு வெளுத்தது முதல்சூரிய அஸ்தம்வரை தன் அபத்தாசையும் வயிற்றாசையும் பிடித்துக்கொள்ளுவது. எவனொருவன் தனக்குஞாயமாக ஏற்பட்டிருக்கிற வயிற்றாசையும் அபத்தாசையும் பிடித்துக்கொண்டானோ அப்போதவன் மனிதனுடைய இயற்கைக்குணத்தை விட்டும் வெறுத்து ஆண்டவனுக்குத் தொண்டு செய்கிறவனாகி ஆண்டவனுடைய அருளைப் பெற்றுக்கொள்கிறான். இப்படி வருஷந்தோறும் ரம்லான் மாசமுழுவதும் நோன்பு வைத்து வந்தால் அவன் உடம்பு கிணற்றைத் தூறெடுப்பதுபோல் உடம்பிலுள்ள நோய்களெல்லாம் நீங்கி ஆண்டவனுக்கு மவன் நல்லடியானாகிறான். இதனாலே ஆண்டவன் நோன்பானது எனக்குரி

யது; எவன் அதை வைப்பானே அவனுக்கு நானே கூலிகொடுக்கிறவனு யிருக்கிறேனென்று திருவுளமாயிருக்கிறுன்.

ஆண்டவன் ஆலம்மலக்சானி, ஆலம் ஹைவானி என்று இரண்டு விதமான படைப்பைப்படைத்திருக்கிறுன். ஆலமலக்கானி என்பது தேவதூதர்கள். அவர்களுக்கு வயிற்ருசையும் அபத்தாசையும் கிடைபாது ஆண்டவனுக்கு தொண்டு செய்கிறதே அவர்களுக்கு வேலே, ஆலம் ஹைவானியென்பது ஆடு, மாடு முதலிய மிருகஜாதிகள் இவைகள் அபத்தாசையும் வயிற்ருசையும் உள்ளது, இவைகள் ஆண்டவனுக்குத் தொண்டு செய்யவேணுமென்கிற கடமைப்பட்டவைகளல்ல, இந்த ஆலமலக்கானி ஆலம்ஹைவானி இரண்டு குணமும் கூடியதாக ஆலம் இன்சானிஎன்கிற மனிதனே உண்டாக்கப்பட் டிருக்கிறது; மனிதன் வயிற்ருசை, அபத்தாசை யுடையவனுகவும் ஆண்டவனுக்குத் தொண்டு செய்யவேணுமென்கிற கடமைப்பட்டவனுயு மிருக்கிறுன், எவனெருவன் ஆலமுல் ஹைவானி என்கிற குணத்தின் அபத்தாசையும் வயிற்ருசையும் வெறுத்து ஆலமுல் மலக்கானி யென்கிற குணத்தின் ஆண்டவனுக்குக் தொண்டு செய்ய வேண்டிய கடமை பூண்டு கொண்டானே அவனே மனிதனென்று சொல்லப்படுமென்றும் அப்படிக்கில்லாதவனே ஹைவானென்று சொல்லப்படுமென்றும் பாரவரன்களான ஞானவான்களெல்லாம் ஒன்றுபோலவே சொல்லி யிருக்கிறுர்கள். இதற்காகவே அல்லாஹுத்தஆலா மனிதனே இந்த இரண்டு குணமும் உள்ளவனுக சிருஷ்டித்து; இவன் ஆண்டவனுக்குத் தொண்டுசெய்ய வேண்டுமென்கிறகடமை யேற்படுத்தி, இவனுக்கு வேதங்களேயும் இரக்கி, இம்மனிதனுக்கு சகல தத்துவங்களேயுங் கொடுத்து இவனுக்காகவே எல்லா வஸ்துகளேயும் உண்டக்கி இவனே தனக்கு தொண்டு செய்யும்படியாக அமைத்து இவ்விதங்களே இவன் அறிந்துதொண்டு செய்யும்பொருட்டு அல்லாஹுத் தஆலாவேதங்களேயுமிறக்கி நபிமார்களேயு மனுப்பி யிருக்கிறுன். ஆகையினுலே யாதொருவன் வயற்ருசையும் அபத்தாசையும் தடுத்துக் கொள்ளுகிறநோன்பானதை வருஷத்தில் ஒருமாசம் செய்து வந்தால் அருனேப்போல் ஆண்டவனுக்கு தொண்டுசெய்கிறவனும் அவனுடைய இவளேப் பெற்றுக் கொள்ளுகிறவனும் வேறேயாருங்

கிடையாது இதற்காற்கவே ஷைநோன்பைப் பர்லாக்கப் பட்டிரு
க்கின்றது.

ஐந்தாவது பர்லு ஹஜ்ஜு யாத்திரை:—இது ஆயுசில்
ஒரு விடுத்தம் திருமக்கா அரபாத்து மலைக்கு குறித்த காலத்
தில் குறித்த ஒழுங்குப்படி செல்லுதல் நமது ஆதிதந்தை தா
யாராகிய பாவா ஆதம் ஹவ்வா இருவர்களும் இன்வுலகத்
தில் ஷை அரபாத்து மலையில் சந்தித்து அல்லாஹுத் தஆலா
விடம் தம்முடைய பாவமன்னிப்புத்தேடி ரக்ஷிப்படைந்தார்கள்
அதேபிரகாரம் நாமும் அத்தலத்திற்குச் சென்று பாவ மன்னிப்
பைத்தேடி ரக்ஷிப்படைய வேண்டு.மென்பதே இன்னும் மனித
னுக்கு இந்த உலக ஆசையை வெறுத்து அவ்வுலக யாத்திரை
ஆசையும் அதிலுண்டாகி அங்குள்ள மஹாஸ்தலங்களை தரிசிக்கி
றதினால் இவனுக்கு பற்பலவிதங்களான ஞானங்களும் பெரியோ
ர்களுடைய வரங்களும் உண்டாகிறதோடு அத்தலயாத்திரை யி
னுடைய மகிமையினால் அவனுக்கு உலகத்தில் ஒருவிதமான நற்
பேருண்டாகி அப்பேரினாலேயே அநேகவிதமான நன்மைகளை
இவன் செய்யவும் துற்கிரியைகளை யெல்லாம் அடியோடு நீக்க
வும் பெருங்காரணமாயிருக்கிறது. இம்மகத்துவம் வாய்ந்த யா
த்திரைக்கிரியையானது ஆண்டவனுக்கு தொண்டுசெய்வதிலும்
ஆண்டவனுடைய தயவைப் பெற்றுக்கொள்ளுவதிலு முள்ளதா
யிருக்கின்றது.

ஆகவே மேற்சொல்லிய ஐந்து விஷயங்களினால் ஆண்டவ
னுக்கு இவன் சொல்லாலும் செயலாலும் உளத்தாலும் பொரு
ளாலும் ஆசாபாசத்தாலும் மற்றும் சகல விதமானவைகளாலும்
தொண்டு செய்கிறவனாயும் அவன் பூரண கிருபையை பெற்றுக்
கொள்ளுகிறவனாயும் அடிமை ஆண்டவனுக்குச் செய்யவேண்
டிய ஊழியத்தை பரிபூரணமாய் நிறைவேற்றினவனாயும் ஆகின்
றான்.

இன்னும் மற்றும் துற்குரியைகளை [redacted]க்குவதினாலும் நற்கிரி
யைகளைப் புரிவதினாலும் இகபரத்தில் சுகானுபவங்களைப் பெற்
றுக்கொள்ளுகிறான் என்று ஷை ஷேக்கவர்கள் போதித்ததை
அங்குள்ள பெருந்திரளான ஈசாயிகள் மனதில் இவை முற்றும்
யதார்த்த மானதென்றும் இஸ்லா மார்க்கமே ஆதியான மார்க்க

மென்றும் இகபர பாக்கியங்களை பெற்றுக் கொள்கிறதற்குத் தருந்த மார்க்கமென்றும் அதில் சேர்ந்தவர்களே மோக்ஷமடைவானென்றும் நன்ருய்ப் பதிந்து சுமார் லட்சம் ஜனங்கள் வரை இஸ்லாமாய் விட்டார்கள். இவ்விஸ்லாமாய் விட்ட சங்கதியின் சுருக்கத்தை நமது "லிவாவுல் இஸ்லாம்" பத்திரிகையில் அப்போதே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்தின் மகிமையைப்பற்றி
ஜப்பான் கான்பரன்சுக் கெழுதிய கடிதம்.

மிஸிரில் பிரசுரமாகிற அரப்பி "அல்மு அய்யிது" பத்திகைக்கு சிங்கப்பூரிலிருந்து ஓர் ஆலிம் பின் வருமாறு எழுதியிருக்கிருர். அதாவது ஜப்பானில் மார்க்க கான்பிரன்சு கூடப்போகிறதாக நான் சிலபத்திரிக்கை வாயிலாய் அறிந்து மிக்க சந்தோஷ மடைகிறேன். ஆனல் ஷை சபைக்கு எனக்கு நேர்ந்திருக்கிற சில அஸந்தர்பத்தால் நான் ஆஜராகாமலிருப்பதைப் பற்றி இரொம்பவும் சஞ்சலமடைகிறேன் ஆகிலும் ஒரு சமயம் அல்லாஹுத் தஆலா கிருபையால் ஷை ஜெப்பானுக்கு நான் சென்று இஸ்லாமார்க்க அந்தரங்க உண்மைகளை பிரசங்கம் செய்யவேண்டுமென்று ஆவலுள்ளவனுக இருக்கிறேன். அன்றியும் எனது இருதயத்தின் சஞ்சலம் நீங்கும்பொருட்டு ஓர் லெட்டர் எழுதி அது ஜப்பானுக்கு எட்டும்படியாக செய்யவேணுமென்று இவ்விடம் சிங்கப்பூரில பிரசுரமாகிற "மகுஸன் இமாம்" என்னும் மலாயி பத்திரிகைக்கு ஒரு பிரதியும் தங்கள் பத்திரிகைக்கு ஒரு பிரதியும் அனுப்பி யிருக்கிறேன். ஷை லெட்டரின் சுருக்கமாவது:—

இஸ்லா மார்க்கமானது உலகத்திலுள்ள எல்லா மார்க்கங்களைவிட மகா சிலாக்கியமானதாகவும் சத்தியமும், ஞானமும் நிறைந்ததாகவும் தீன் துனியா இரண்டிலும் மெருமேபா மேபான தாகவும் அதின் புகழையும், தகுதியையும் யாராலும் மட்டிடஏலாததாகவுமிருக்கின்றது. மேற்படி மார்க்கத்திறகு பிரதானமாக குரு ஆன் ஹதீஸ் முதலியவைகளா யிருக்கின்றன. யாராவது மேமறபடி மார்க்க உண்மையைப்பற்றி வினவினல் அதற்கு மிக்க ஆனந்த சந்தோஷத்துடன் விடை மகாடுககதயாராயிருக்கிறேன. யாராவது ஒருவர் தன்னுடைய கொள்கையை விட்டும வேருெரு கொள்கையில திரும்புவது தன்னுடைய பிரயோஜனங்களுக்க்க அல்லாது வேறில்லை- ஜப்பானியர்கம் தங்

கள் மார்க்கத்தையே அல்லது கிறிஸ்து யூதர் மார்க்கத்தையோ உண்மையான மார்க்கமென்று தெரிந்துகொண்டால் ஜப்பானியர்கள் இப்போது இருக்கிற நிலைமையைவிட வெகு சிலாக்கியமான நிலைமை அவர்களுக்கு உண்டாகாது ஏனென்றால் அவர்கள் தங்கள் மார்க்கத்தையே மேலாக காணும் விஷயத்தில் அவர்களுக்கு இப்போது இருக்கிற நிலமையிலேதான் அப்போதும் இருப்பார்கள். அல்லது கிறிஸ்து மார்க்கத்தை மேலாகக்கண்டு அதிலவர்கள் திரும்பினார்களேயானால் இவர்கள் ஐரோப்பிய ஜாதியாருக்கு எதிரில் ஹபஷியர் அரசர் எத்தன்மையாக இருக்கிறாரோ அத்தன்மையாகவே இவர்களும் இருப்பார்கள்.

இதனால் உலகத்திலுள்ள எல்லா ஜாதியார்களைவிட இவர்களுக்கு மேலானபுகழ் உண்டாகமாட்டாது. இப்போது ஜப்பானியர்கள் உலகத்தில் எல்லாரைவிட மேலான புகழும் கீர்த்தியும் இல்லற ஒழுக்கமும், துறவா இன்பமும் ஆகியவைகளில் மிக்க பேர்போனவைகளாயிருக்கவேணுமென்று வெகுவாய் நினைக்கிறார்கள். இவ்வெண்ணம் மேற்சொன்ன விஷயத்தினால் அவர்களுக்கு நிறைவேரமாட்டாது. ஆனால் இவர்களுக்கு மேற்படி எண்ணம் நிரவேற வேண்டுமானால் பரிசுத்தசத்திய இஸ்லாமார்க்கத்தை தழுவினால் பூரணமாய் நிறைவேரும். யாராவது இஸ்லாமார்க்கத்தைத் தழுவினால் கடலில் எவ்வளவு அஸுத்தஜலங்கள் சேர்ந்தால் அதனை கடல் தன்னைப்போல் சுத்தமாக்கி தன்னுடன் சேர்த்துக் கொள்ளுகிறதோ அதனைப்போல் முஸ்லிம்களும் அன்னியர்கள் தங்கள் மதத்தில் சேர்ந்தால் அவர்கள் யாதொரு ஜாதிபேதகமன்றி தங்களுடன் சேர்ந்து தங்களைவிட அவர்களுக்கு மேலான மதிப்பு கொடுக்கிறதுமன்றி அவர்கள் காலில் தைக்கிற முட்களை தங்கள் கண்ணில் தைத்தது போல் பாவிக்கிறார்கள்.

ஜப்பானியர்கள் இஸ்லாம் ஆய்விட்டார்களே யானால் ஜப்பானியர் தொகைக்கு அதிகமாயுள்ள சீனத்து முஸ்லிங்களுக்கு அவர்கள் சகோதரர்கள் ஆய்விடுவார்கள். அன்றியும் ஜாவா, மலாயி, இந்தியா இலங்கை முதலிய ராஜ்ஜியங்களிலுள்ள ஏறக்குறைய நூற்று அன்பது மிலியன் முஸ்லிம்களின் நோவுகளுக்கு ஜப்பானியர்கள் வெகு அபூர்வமான மருந்தாயிருப்பார்கள். மே

1713725
171374

ளும் ஜப்பானியர்களின் காலில் தைக்கிற முள்ளே ஷெ முஸ்லிம்களின் கண்ணில் தைக்கிறதைப்போல் பாவித்து சகல விஷயத்திலும் அவர்களை துதி கூறிக்கொண்டாடுவார்கள். அன்றியும் உதயகிரி முதல் அஸ்தகிரி வரையுமுள்ள சகல முஸ்லிம்களுடைய புகழுக்கும், ஜப்பானியர்கள் பாத்தியமாவார்கள். இந்தியாவில் 70 மிலியன் முஸ்லீம்களுடைய சந்தோஷத்திற்கு ஜப்பானியர்கள் எப்போது பாத்தியப் படுகிறார்களோ அப்போது ஷெ முஸ்லீம்களுக்கு சகல விஷயத்திலும் நற்கருணை புரிந்து அரசாட்சி செய்கிற இந்திய கவர்ன்மெண்டும் ஜப்பானியர்களின்பேரில் வெகு நேசமாயிருக்கிறதில் தடையில்லை. மேலும் ஜப்பானியர்களுக்கு இப்போது ருஷிய யுத்தத்தில் கிடைத்திருக்கிற கீர்த்தி எந்தகாலமும் மென்மேலும் அதிகரித்து வருவதில் யாதொரு தடையில்லை.

இவ்வளவு மகிமைகளும், கீர்த்திகளும் மென்மேலும் தகுதிகளும், மகிட்சிகளும் ஜப்பானியர்கள்பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் எவ்வளவு திரவியங்கள் சிலவுசெய்து எவ்வளவு உயிர்களை வதைசெய்து எவ்வளவு காலம் முயற்சி எடுத்தாலும் கிடைக்க மாட்டாது. ஆனால் மேற்சொன்ன விஷயங்களுக்கு மற்று மட்டிலடங்காத கீர்த்திகளும் இரண்டுசொல் அவர்கள் நாவில நடக்கிறதினால் உண்டாகிவிடுகிறது. அதாவது மேன்மைதங்கியமகா சிறப்பாகிய "லாயிலாஹா இல்லல்லாஹு, முஹம்மதுர் றசூலுலாஹி" யென்கிற திருகலிமாவாயிருக்கும், ஆகையால் ஜப்பானியர்கள் நாவில் ஷெ திரு கலிமா நடந்து அவர்களுக்கு மேற்சொல்லிய பிரயோஜனங்களை பெற்றுக்கொள்ளும்படி அல்லாஹுத்தஆலா கிருபை ரஹமத்து செய்தருள்வானாக ஆமீன். இச்செய்திகள் 1906ஹு ஜூலை மீ 30உ அல்மு அய்யத்தில் வருகின்றது.

மேற்படி கான்பரன்ஸ் சபையில் ஜப்பான் அரசரும், ஷெ மந்திரிமார்களும், குருமார்களும் ஷெ சபைக்குவந்து ஆஜராகி இஸ்லாமார்க்கமே மேலான மார்க்கமென்று ஷெ சபை எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு அங்குள்ள பலபாகங்களிலும் சின்ன, சின்ன கமிட்டிகள் ஏற்படுத்தி இந்தகான்பரன்ஸ் சபையார் அங்கீகரித்திருக்கிற பிரகாரம்செய்து ஜனங்கள் இஸ்லாமார்க்கத்தை மேலானதாகக்கண்டு ஜனங்கள் இஸ்லாமாகும் பொருட்டு ஷெ

கமிட்டி முயற்சி எடுக்கவேணுமென்றும் இம்முயற்சியினல் இருபது வருஷத்துக்குள்ளாக ஜப்பான் முழுவதிலும் இஸ்லாமார்க்கம் பரவி விடுமென்றும், ஷெ கான்பரன்ஸில் தீர்மானித்து ஜனங்களுக்கு இத்தீர்மானத்தையும் இஸ்லாமார்க்கத்தின் நன்மைகளேயும் பிரசங்கம் செய்கிறதற்காக மிஸர், துருக்கி, காபூல் முதலிய ஊர்களிலிருந்து ஷெ கான்பரன்ஸுக்கு சென்றிருந்த உலமாக்களுக்கு தக்கபடியான உதவிகள்செய்து அவர்களும் பல பாகங்களுக்குப்போய் இஸ்லா மார்க்கத்தின் நன்மைகளேப் போதித்து வருகிறதினல் அங்குள்ளவர்கள் ஏராளமாய் இஸ்லாமாகிக்கொண்டே வருகிருர்கள். நாயன் கிருபையால் இன்னம் சொற்ப காலத்தில் ஜப்பான் முழுமையும் இஸ்லாமாயி விடுமென்று நம்பப்படுகின்றது.

## 3-ம் அதிகாரம்.

டப்ளியூ. எச். முஹம்மது அப்துல்லா குயிலியம் துரை பீ. ஏ. அவர்களால் கோர்வைசெய்த "சம்ஷுல் இஸ்லாமில் பின்வருமாறு கூறப்படுகின்றது:—

இஸ்லாம் மதகபானது, தன்னே கபூல்செய்தவர்களே வேறெந்த மதத்திலுந் திரும்பாதிருக்கச் செய்வது மின்றி, என்றென்றும் உறுதியான ஈமானுடன் காயமாக இருக்கச்செய்கிறது. கிறீஸ்து, மதமோ அப்படியல்ல, தன்னே கபூல் செய்தவர்களே அவ்வளவு உறுதியாயிருக்கச் செய்வது அரிது.

"இஸ்லாம் மார்க்கத்திற்குத் திருப்பப்பட்ட ஆபிக குடிகள், புத்தை வணங்க திரும்பிச் செல்வதுமில்லே. கிறிஸ்து மதத்தைக் கைப்பற்றுவது மில்லே. கிறிஸ்து மதத் தைப் பார்க்கிலும் இஸ்லாம் மதமே சீர்திருத்த அபிவிர்த்திக்கு மிகவும் அனுகூலமாகவிருக்கிறது. இஸ்லாம் மதததின் பயனே பார்க்கவேண்டில், மத சம்பந்த மில்லாத பிராணிகளுடையவும், இராணுவ உத்தியோகஸ்தருடையவும் வாக்குமூலங்களே திருஷ்டாந்தமாக வெடுத்துக்கொள்ளுங்கள்.

இஸ்லாம் மதஹபானது ஹபஷி வம்சத்தார்களால் கபூல் செய்யப்பட்டவுடனே புத்தை வணங்குதல் ஷைத்தான்களே வணங்குதல், கிரஹ ஆராதனே, நரபலி, நரமாமிச பக்ஷணம், சிசுவதை, மந்திரோச்சாடனம் முதலியவை மாயமாய் மறைந்தோடுகின்றன. அவர்கள் உடை உடுக்க ஆரம்பிக்கின்ருர்கள். அசு

த்தம் ஒழிந்து, சுத்தம் ஏற்படுகின்றது. மரியாதையும் யோக்கி தையும் உடையவர்களாகின்றார்கள். தயாளமே சத உரிமை யாக ஏற்படுகின்றது. மதுபானம் அரிதாய் விடுகின்றது. சூதாட்டம் கண்டிக்கப்படுகின்றது. தலைவிரி கோலமாய் கூத்தாடுதலும், ஹத்தில்லாத ஆண் பெண்கள் முலாகாத்துச் செய்கிறதும் ஒழிந்து போகின்றன. பெண்களின் கற்புடைமையே பெருத்த சவாபாகக் கருதப்படுகின்றது; சோம்பல் நீங்கி சுறு சுறுப்புண்டாகின்றது. சுய இச்சைக்குப் பதிலாக சட்டமே யுண்டாயிருக்கிறது ஒழுங்கு விஸ்தரிக்கிறது; லாகிரி அடியோடே ஒழிந்து போகின்றது. ஜீவஹிம்சையும், அடிமைகளை அநியாயமாய் நடப்பித்தலும் கண்டிக்கப் படுகின்றன, மானுஷீக அநுதாபமும், தயாளத்துவமும் சகோதரத்துவமும் உள்ளத்தே உதிக்கப் பண்ணுகிறது பலஸ்திரி விவாகமும் அடிமையை ஆளுதலும் ஒழுங்காக்கப்பட்டு இவற்றால் விளையும் கொடுமைகளும் தடுக்கப்படுகின்றன இவற்றிற் கெல்லாம் மேலாக மஸ்துள்ள வஸ்துக்களை முற்றும் நிராகரிப்பதில் துன்யாவிலுள்ள எல்லா மார்க்கங்களைப் பார்க்கிலும் இஸ்லாமே உறுதிப்பாடுடையது ஆனால் ஐரோப்பிய மார்க்க மென்றாலோ மதுபானாதி பாவங்களை விர்த்தி செய்து ஜனங்களைப் தாழ்ந்த படிச்தாரத்திற்கு கொண்டுவருகிறது. இஸ்லாம் மார்க்கமோ ஜனங்களை மேலான தர்ஜாவிற்கு நடத்துகிறறு அதாவது தன் மானத்தை காப்பாற்றிக் கொள்ளுதல், உண்மைபேசல், தேகசுசிகரம்அதபாய் உடை உடுத்திக்கொள்ளல், எழுதவும் படிக்கவும் திராணியுண்டாக்கல் முதலிய கியானத்தை யுண்டாக்குவதே.

இஸ்லாமானது துர்க்கிருத்தியங்களை ஒழித்து சீர்திருத்தத்தை விர்த்திசெய்யுந் திராணி மிகவியக்கத்தக்கதே! ஆப்ரிகா பாதிரிமார்கள் மூலமாய் இவ்வளவு பெருந்தொகை செலவழிந்ததென்றும், அருமையான இத்தனை பேர்களின் பிராணசேதமாயிற்றென்றும் நாம் அளவிட்டுச் சொல்ல முடியாது; அப்படி செய்தும் கிறிஸ்துமதம் புகுந்தவர்கள் ஆயிரக்கணக்காவும், இஸ்லாமார்க்கத்தை கபூல் செய்தவர்கள் பத்து லக்ஷக்கணக்காகவும் எண்ணப்படுகின்றார்கள். ஆதலால் நாம் கவனிக்க வேண்டியது இந்த மாறாத விஷயங்களையே; இவை மிகுதியும்

வருத்தத்தை யுண்டாக்கத்தக்க விஷயங்கள் இவ்விஷயங்களையெல்லாம் கவனியாது இருப்பது அறிவீனம்.

இஸ்லாம் மார்க்கமானது ஈஸாயி மதகபுக்கு விரோதமானதல்ல வென்றும் அது அரைப்பங்கு ஈஸாயிமதகபிற் சேர்ந்ததே என்றும் அறிந்து கொண்டே நாம் ஆரம்பிக்க வேண்டும் இப்ருஹீம் அலைகிஸ்ஸலாம், மூஸா அலைகிஸ்ஸலாம் ஆகிய இவர்களுடைய மதகபுகளுடன் ஈஸாயி மதாம்ஸங்கள் பொருந்திய இஸ்லாமானது ஓர் அச்சில் உதித்ததே ஆனால் இஸ்லாம் மார்க்மானது சுயவகுப்பில் மாத்திரம் கலப்புரிமையுடைய யகூதி மார்க்கத்தைப் போலாகாது உலகமுற்றிலும் அபேதசம்பந்தம் பாராட்டத்தக்கது யகூதிமார்க்கம் முதலியவைகள் ஒரு கவுமுகளுக்கு அல்லது ஒரு கூட்டத்திற்குச் சொந்தமாயிருந்தது இஸ்லாமோ துன்யாவிலுள்ள எல்லாகல்குகளுக்கும் முஸ்லீம்கள் பெருத்த நான்கு பேஷுவாக்களை அங்கீகரிக்கின்றார்கள். இவர்களோ அல்லாஹுத் தஆலாவின் கலீமாகிய இப்ருஹீம் அலைகிஸ்ஸலாமும் அல்லாஹுத் தஆலாவின் கலீமாகிய மூஸா அலைகிஸ்ஸலாமும் றாகுல்லாவாகிய ஈஸா அலைகிஸ்ஸலாமும் அல்லாஹுத் தஆலாவின் நல்மாபாயத்தை இருஜஹானிலும் பரவச்செய்ய வந்த ஹபீபுல்லாவாகிய முஹம்மது ரசூலுல்லாகி சல்லல்லாஹு அலைகிவசல்லம் அவர்களுமே.

முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய இர்ஷாதுகளில் ஈஸாயிமதஹபுக்கு எதிரேகமானது ஒன்றுங்கிடையாது இஸ்லாமானது மூஸாயி மதகபிற்கும் ஈஸாயிமதகபிற்கும்மத்திய பாதையில் உள்ளது ஆபிரிகா, ஷாம் ஆகிய இத்தேசங்களிலிருந்த கிறிஸ்துவ பண்டிதர்கள் அஸலான ஈஸாயிமதகபிற்கு பதிலாய் நிச்சய மற்றதும் கருத்துப் பொருள்ளதுமான அஹ்காம்களை நூதனமாய் ஸ்தாபித்தார்கள் எப்படியெனில் அந்தப் பண்டிதர்கள் காமவிகாரத்தை பிரமசாரித்துவம் கன்னியாஸ்திரித்துவம் ஆகியவைகளினால் தடுக்க முயன்றார்கள் லோகாசாரத்தை யொழித்தலே சுத்தாத்மிதத்திற்கு வழியாகவும் அசுத்தமே சந்நியாசித்துவத்திற்கு இயல்பாகவும் நினைத்தார்கள் சாதாரணமாகவே ஜனங்கள் முஷ்ரிக்குகளாகவும் எண்ணிருந்த ஷுஹதாக்களையும் மலாயிக்குகளையும் பீர்மார்களையும்

தொழுது வந்தார்கள் இவ்விதம் ஈஸாயி மதகபானது சீர்குலைந் திருந்தபடியால் ஆப்ரிகா ஷாம் ஆகிய தேசங்களில் சீர்திருத்தப் பட்ட மூஸாயி மதகபு வெகு துரிதத்தில் பாவி இத்தியாதி குற் றங்களையும் மூடபக்திகளையும் ஒழித்து விட்டது இஸ்லாமோ பிரயோசனமற்ற மதப்போருக்கு வைரியானது பிரம்மசாரித்து வமே தேவ பக்திக்குச் சிரோபூஷணம் எனவியந்து பேசும்கொ ள்கையை அது ஆண்மையோடு மறுதலிக்கத் தக்கது. இஸ்லா மோ அது மூலதாரணமான மதசித்தாந்தங்களாகிய அல்லா ஹூத் தஆலாவின் பெருமையையும் ஏகத்வத்தையும் வஹதானி யத்தையும் வெளிக்கு கொண்டுவந்தது. அது சந்நியாசத்துவத் திற்கு பதிலாய் இன்ஸானியத்தையும் வீரியத்தையும் நிலைநாட் டியது. அது அடிமைகளுக்கு மீட்சியையும் கல்குகளுக்குச சகோதர வாஞ்சையையும் அகவியத்தின் ரிஷ்தாக்களையும் மனுஷ சுபாவத்தின் உணர்ச்சியையும் ஈந்தது.

இஸ்லாம் மார்க்கத்தின் பாக்கியத் ஆவது இச்சையடக்கல், சுசிகரம் கற்பு நீதி மனோதிடம் தைரியம் தருமஸகாவத் உபச ரணை விருந்தோம்பல் சத்தியம் சதாகத் அமைதி தவக்கல் சபூர் ஆகிய இவைகள் இன்னதென சாதாரண ஜனங்களும் தெரிந்து கைக்கொள்ளும் படியானவைகளென்பதே.

அவர்களுக்கு முக்கியமான நால்வகைச் சன்மார்க்கங்களை விருத்திசெய்யவும் ஏழுவகை மாபாதகங்களைப் பரிதியாகம் தர க்கு செய்யவும் போதிக்கக்கூடும். மனிதருள் சகோதரத்வமே சிரேஷ்டமான ஆலாவான தென்பது கிறிஸ்து சமயத்தவர்கள் மனப்பாலனையே யொழிய அனுபவத்தில் அவ்விதமல்ல ஆனுல் இஸ்லாம் மதகபோ உண்மையான சகோதரத்துவ அனுசாரத் தையே கற்பிக்கின்றது. அதாவது முஸ்லிங்களுள் சங்கசமத்து வம் முஸ்லீம்களின் மஜ்லிஸில் ஒவ்வொருவரும் மஸாவியான மர் தபாவையுடைத்தா யிருக்கிருர்கள் என்பதே. இஸ்லாமார்க்கம் கொடுக்கின்ற பெருத்த பரிதானம் இதுவே.

இஸ்லாமாகிய தவுலத்தைப் பெற நசீபுள்ளவர்கள் ஈமான் கொண்டவுடனே யாதொரு தடையுமில்லாமல் முஸ்லீம்களின் இஜ்மாவில் சேர்க்கப்பட்டு பதினைந்து கோடி முஸ்லீம்களுக்குள் சமபாகிய ருத்பாவையுடைய ஒருவராய் விடுகிருர்கள். கிறிஸ்து

மதத்திற் புகுந்த ஒருவன் அவர்கள் சங்கத்தில் சமத்துவமுடைய வனுகக் கருதப் படுகின்றதில்லை. ஆனல் இஸலாத்தை கபூல் செய்த ஒருவனே சத்தியமாக அங்ஙனமே கருதப்படுகிறான்.

கிறிஸ்துவராகிய அன்புள்ள என் சகோதரனே! என் அருமை சகோதரனே! என் கடிதங்களிலும், புஸ்தகங்களிலும் அப்பரிமிதமாய் எழுதுவது வழமை. ஆனல் இப்படி காகிதத்தில் எழுதியிருப்பதை ஏட்டுச் சுரக்காயாக மாத்திரம் காணலாமே யொழிய தினனுசார வாழ்க்கையிலோ உண்மையாய்ஒருவருங்காணப் படுவதில்லை. குர்ஆனே ஷரீபானது அஸலாகிய ஜன்னதின் வஅதா செய்கிற உண்மையே யாயினும் இவ்வுலக சங்கமத்தில் அனுபவிக்கும் சுகானுபவங்கள் துன்யாவின் ஹறூகள் அதனினும், விசேஷமாக கருதப்படத் தக்கவைகளே.

"இஸ்லாம் மதகபானது சமத்துவமும், அமரிக்கையுமுடையதாதலால் நான் அதை உரிமை பாராட்டுகிறேன். ஒப்பாசாரக் கள்ளர்களைப்பற்றி நமக்கு ஆவசியமில்லை; நமது கூட்டத்தில் காலத்திற்குத் தக்கபடி நடப்பவர்கள் சேர்க்கப்படார்கள். வெளி வேஷங்காட்ட நமக்குக் காலமும் போதாது அதில் நமக்குப் பிரீதியுமில்லை. நம்முடைய மதகபே நமது பிராணன்.

"கார்லைல் என்பவர் ஊடுருவிச்செல்லும், தமது புத்தி கூர்மையினல், நமது நபி முஹம்மது சல்லல்லாஹூ அலைஹி வசல்லம் அவர்களுடையவும், அவரைப்பின் தொடர்ந்தவர்களுடையவும், தன்மையை யுணர்ந்து அறிந்து அடியிற்கண்டபடி குறிப்பிக்கின்றார். "முஹம்மது சல்லல்லாஹூ அலைஹிவசல்லம் அவர்கள் எவ்வாற்றாலும் நிலைபிசகாதிருக்கிறபடியால் அவர்களை நான் நேசிக்கிறேன். அவர் உள்ளதையுள்ளபடி செய்யும் சுயமுயற்சியாளர்; இல்லாததை யிருக்கிறதாய்ப் பாசாங்கு செய்கிறவரல்லர். அவரிடத்தில் ஆடம்பரமான பெருமை அற்பமுங் கிடையாது; ஆயினும் அடக்கத்திலும் நிந்திக்கத்தக்க விதமாய் அடக்கமு முடையவரல்லர்; அவர் தன் அந்தஸ்திற்குத் தக்கபடிஎப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருப்பவர்; பாரிஸ் தேசத்து அரசர்களானாலும் சரியே, யூனன் தேசத்து சக்கரவர்த்திகளானாலும் சரியே, அவர்கள் செய்யத்தக்க தெதுவோ அதை ஒளிக்காமல் சரியாய்ப் பேசுவார். அவர் தம்மை நன்றாயுணர்ந்தவர். அல்லா

சுபகானுகுத்த ஆலாவின் மரியாதையும் உணர்ந்தவர். அவர் சந் தோஷப் பிரியரல்லர். அழிவில்லாத சந்தோஷமுந் துக்கமும் சுவர்க்கத்தையும் நகரத்தையும் அநுசரித்ததென்று நம்பத்தக்க வர். இதுவிஷயத்தில் நீங்காத ஆவலுங் கவலையுமுடையவர்.

மேற்கண்ட துர்குணங்களெல்லா மில்லாத முகம்மது சல் லல்லாஹு அலைகிவசல்லம் அவர்களின் இஸ்லாம் மார்க்கமானது முன்னுள்ள பெரியமார்க்கதுதைப்போலவும், மனிதத்துவத் தின் அகக் கண்போலவும் இருந்து முற்றும் சமத்துவம் பாராட் டத்தக்கது. ஒரு மூமினுடைய ஹயாத்தானது துன்யாவின் எல் லா அரசாங்கத்திற்கும் மேலானதாயிருக்கிறது; இஸ்லாத்தின் அகீதாவின் படியும் எல்லா மனிதர்களும் சமத்துவமுடையவர் களே மொத்தார்த்தமாய்ப் பார்க்குமிடத்தில், முகம்மது சல்லல் லாஹு அலைஹிவஸல்லமவர்களின் இந்த இஸ்லாம் மதகபானது ஓர்வித ஈஸாயிமதகபா யிருக்கிற தென்றும் ஆத்மார்த்த விஷய மாய்ப் பார்க்கு மிடத்து எல்லாவற்றைப் பார்க்கிலும் மேலான உடையதென்றும் இரண்டாந்தடவையும் சொல்கின்றேன்.

இந்த பன்னிரண்டு நூற்றுண்டுகளாக உலகத்திலுள்ள எல் லா மனிதர்களிலும் ஐந்தில் ஒரு பாகத்தினர் மதகபாகவும் ஆத் மார்த்தமாகவும் இருக்கிறது. யாவற்றிற்கு மேலாக இம்மதக பானது மனப்பூர்வமாய் நம்பப்பட்ட ஓர் மதகபாயிருந்திருக்கி றது இதில் அரபிகள் தங்கள் மார்க்கத்தில் ஈமான்கொண்டு அத னுல் ஜீவிக்க முயல்கிறுர்கள். தற்காலத்துள்ள இங்கிலீஷ் புயூரி டன் கிறிஸ்தவர்கள தவிர பூர்வகாலந் தொடங்கி ஒரு கிறிஸ்த வர்களும் இஸ்லாமானவர்களைப் போல தங்கள் மதகபிலேயே முழு ஈயானேடு காலாகாலம் எப்போதும் நின்றதில்லை. காஹிரா பட்டணத்தின் வீதியிலுள்ள காவலாளி வழிபோக்கரை நோக்கி யார் போகிறதென்று கேட்டால் அதற்கவன் கொடுக்கும் உத் திரவோடு "லாயிலாஹ இல்லல்லாஹு" என்று மறுமொழி கூறு வதை யின்றிரவிலுங் கேட்கலாம்.

அல்லாஹு அக்பர்! இலக்ஷக்கணக்கான இஸ்லாமாகிய இவர்களின் ஆத்மாவிலும் அவர்களின் தினுனுசார வாழ்க்கை யிலு மெல்லாம் இஸ்லாமே சப்திக்கிறது. மலாய்க்காரர்கள், கறுத்தபாபுவானியர்கள், கொடிய விக்கிரக ஆராதனைகள் ஆகிய

இவர்களுக்கு ஹிமாயத்துள்ள போதகர்கள் இஸ்லாத்தைப் போதித்து தீமையானவைகளை யெல்லாம் ஒழித்து அந்த ஸ்தானங்களில் நன்மைகளை ஸ்தாபித்து வருகிறார்கள்.

இஸ்லாத்தின் அகீதாவானது இத்தன்மை யுடையதாயிருக்கிறது, ரசூல்மார்களில் மிக மேலானவரும் உலுல் அஸ்மியானவரும கதமுல் அன்பியாவானவருமன ஜனாப்சர்வரே ஆலம் முகம்மத்முஸ்தபா சல்லல்லாஹு அலைகிவசல்லம் அவர்கள் கற்பித்தபடியே இன்னும் நடப்பவர்களும், நாளொன்றிக்கு ஐந்து வக்தும் சர்வ வல்லமையுள்ள அல்லாகுத் தஆலாவை முழு ஈமானோடு தொழுபவர்களுமான 180,000,000 ஜனங்களுடைய ஈமான் இத்தன்மையுடையதா யிருக்கின்றது.

இஸ்லாமானது மெக்ஸிகோ தேசமுதல் ஆபிரிகா வடகரையோரத்திலும், தென்பாகத்தில் டிரான்ஸ்வால், ஜான்ஜிபார் முதலிய விடங்களிலும் பரவியிருக்கின்றது. இந்த மதகமானது எகிப்து துருக்கி அராபி பாரஸிகம், ஆப்கானிஸ்தான், துர்க்கிஸ்தான் முதலிய தேசங்களில் ராஜாங்கம் செய்து வருகின்றது மல்லாமல் இந்தியாவில் 41,000,000-மூமின்களிருக்கின்றார்கள். இம்மார்க்கமானது மலாயிக்காரர்களுக்கும் வெகுதிடமாக போதிக்கப் பட்டிருக்கின்றது. சீனதேசத்திலும் நிலையாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. மற்றுமுள்ள உலகத்தின எல்லாப்பாகங்களில் போதகாசாரியர்கள் சென்று இதைப் பரவச்செய்து வெற்றியடைந்து வருகிறார்கள்.

இந்த சகோதரத்துவத்தை அனுபவிக்க வேண்டிதான் இங்கிலாந்திலுள்ள நமது சகோதரர்களை யழைக்கின்றோம். இந்த மதகைத்தான் அவர்கள் ஒப்புக்கொள்ளும்படி சொல்லுகிறோம். தந்திரமுள்ள மதசாஸ்திர பாதிரிமார்கள் தலைமுறைகள் தோறும் ஜனங்கள் மனதில் பதித்து வைத்திருந்த மதப்பொறாமையை ஒருபுறங் கட்டிவைக்கும்படி சொல்கின்றோம்.

மனுதிதமும் அசாதாரணமுமான விஷயம் அவசியம் சந்தேகத்தையும் அவநம்பிக்கையையு முண்டுபண்ணி சிலவேளை உண்மையான விசுவாசிக்கும் மயக்கத்தையுங் கொடுக்கும். இதுகளியெல்லாம விசேஷமாய்ப் பயபபடத தக்கது மதவிசுவாசமேயாகுமெனில் இம்மத விசுவாசத்தின் சம்பவங்கள் அதிக பாரமா

னதாகவும் அதன் தவறுதல் ஆபாசம் ஆகியவைகளின் முடிவான பல கெடுதிகளாகவும் இருக்கின் றமையாலேயே நாம் தெரிந்துகொள்ள விரும்பும் முக்கியமான விஷயம் யாதெனில் நமது ஆன்மை சுபாவமும், அல்லாகுத் தஆலாவின் நியமனமுமேயாம்;

இஸ்லாம் மார்க்கமே இதற்கு வெகுலேசில் பதில்சொல்லும் மனிதர்களினால் ஆராய்ந்தறியக் கூடாதவனும் சர்வக்கியானிமாகிய அல்லாசுபகானகுத்த ஆலாவின் சித்தத்திற்கு இராதத்திற்குக் கீழ்ப்பணிந்து நடக்கும்படி மனிதனுக்கு இஸ்லாம் போதிக்கின்றது. அல்லாசுபகானகுத்த ஆலாவினிடமிருந்து நீங்கள் வந்தீர்கள், அவனிடமே மறுபடி நீங்கள் போகவேண்டும்.

டாக்டர் மாட்ஸ்லி என்பவர் சொல்நயமும் பொருள் நயமும் அமைய உள்ளபடி அடியில் வருமாறு சொல்லி யிருக்கின்றனர்:—'திரிகரணசுத்தியோ அல்லாசுபகானகுத் தஆலாவினிடத்தில் நான் நடந்துகொள்ள வேண்டுமென்னும் விஷயத்தை ஒவ்வொருவனும் வழுவாமல் தன் முக்கியமான கோட்பாடாக அமைத்துக் கொள்ளவேண்டும்; அவ்வாறு நடந்துகொள்ளுங் குணத்தை ஒவ்வொருவனும் இயற்கையில் அடைந்திருக்க வேண்டிய குணமாயிருப்பது போலவும் நாளாவிர்த்தியில் பொறுமையுடன் அடையவேண்டிய குணமாயிருப்பது போலவும் பாவித்து அதை அபிவிருத்தி செய்துவர வேண்டும் ஒவ்வொருவனும் உலகத்தில் உயிரோடிருக்கும் வரையிலே அல்லாசுபகானகுத்த ஆலாவின் தியானத்தில் முழுவதும் ஈடுபட்டிருப்பதென்றும் இக்குணத்தை மேலே சொன்னபடி அடைந்திருப்பானாகில், அநித்தியமான தேகத்தைவிட்டுத்தன்னிடத்து ஐக்கியமாகும்படி அல்லாகுத் தஆலா கட்டளையனுப்புந் தருணமாகிய மரணகாலத்திலே, தன்னைப் போர்களத்தில் வெற்றிகொண்ட சத்துருவினிடம்போக திகிலடைந்து மனங்கலங்கி நிற்பதுபோல மயங்காமல் ஒரு நாள் முழுதும் செய்யவேண்டிய வேலையைச்செய்து முடித்த குழந்தையைப் பார்த்து "குழந்தாய்! இனி உறங்கு" என்று பரிவுடன் இம்மொழி கூறும் மாதாவைப்போல் அல்லாகுத் தஆலாவிடம் நம்பிக்கையோடு பாவிக்க நேரிடும். முஸ்லிம்களின் அதிதாவானது எல்லாம் அல்லாகுத் தஆலாவின் திருவுளச் செயலேயன்றி வேறில்லை என்பதே. மேற்கண்டபடி

முஸ்லிம்களின் அகிதாவின் லட்சணமிப்படிப்பட்ட தென்பதை மேலே டாக்டர் மாட்ஸ்லி என்பவர் சொல்லுகிறது போலவே நாமும் கூறலாம்.

"முடிவாக, இஸ்லாத்தை கபூல்செய்ய ஆயத்தமாயிருக்கிற வர்களுக்கு எச்சரிக்கைப் படுத்துகிறது போலவே, முன்னமே தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு கிறீஸ்துமதத்தை யொழி த்து இஸ்லாத்தை கபூல்செய்திருக்கும் தைரிய சாலிகளுக்கும் எச்சரிக்கைப் படுத்துகிறேன், அதென்னெனில், அவர்கள் நகை க்கப்படுவார்கள், தூஷிக்கப்படுவார்கள், அவர்களின் நோக்கங் கள் தர்க்கிக்கப்பட்டு மோசக்கருத்துள்ள அர்த்தஞ் செய்யப்படு வார்கள் என்பதே.

"இவ்விதமே முஹம்மது சல்லல்லாஹு அலைஹவசல்லம் அவர்களின் காலத்திலும் நடந்துவந்தது. துன்யா முடிகிற வரையிலும் அப்படியே நடக்கும். அவர்களை ஆற்றித் தேற்றி அவர்கள் ஈமானிலேயே நிலைத்திருக்கச்செய்ய குர் ஆனேஷரீபில் அல்லாஹுத் தஆலா திருவுளமாயிருக்கிறது:—

"அவர்கள் இஸ்லாமாவதை உமதுமீது உபகாரமாய் எண் ணுவார்கள். அவர்களுக்கு நீர் சொல்லும்; நீங்கள் இஸ்லாமா வதை என்மீது உபகாரமாய் எண்ணுதேயுங்கள். ஆனால், நீங்கள் உண்மையுள்ளவர் களாயிருந்தால், அல்லாஹுத் தஆலா உங் களை ஈமானளவில் நேர்வழி காட்டுவதை உங்கள்மீது உபகார மாய் எண்ணுவான். அல்லாஹுத் தஆலா வானத்திலும் பூமியி லும் மறைந்திருப்பதை யறிவான், நீங்கள் செய்கிறதை அவன் பார்க்கிறுன்" என்பதே.

## 4-ம் அதிகாரம்.

### இஸ்லாத்தின் பெருமை.

"இஸ்லாம் நேசன்" முதல் லக்கப் பத்திரிகை பின்வருமாறு கூறுகின்றது:—

"இஸ்லாமார்க்கம் ஒன்றே உலகத்தார் உய்யும் பொருட்டு கடவுளால் அருளப்பட்ட வேதத்தையுடையது. சகல நபிமார்க ளாலும் போதிக்கப்பட்டு வந்ததும் இஸ்லாமார்க்கமே மனிதர் களை யொற்றுமைப்படுத்தி இகபரசுகங்களைக் கொடுப்பதும்இஸ் லாமார்க்கமே யாதொரு உதவியும் பிரயாசையு மின்றி தன் நீதி

யால் பரவிக்கொண்டுவரும் மார்க்கமும் இஸ்லாமார்க்கமே மனிதர்களுக்குக் கொடுக்கப் பட்டதுமுதல் எந்நாளும் பேதப்படாமலிருப்பதும் தன்னை அடைந்தவர்கள் தன்னைவிட்டுப் பிரியாமல், காந்தம் இரும்பை இழுத்துக் கொள்ளுமாறுபோல், மனிதர்களைத் தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளும் வல்லமையுடையதும் இஸ்லாமார்க்கமே தனக்குமுன் சகலமார்க்கமும் விர்த்தியடையாதிருக்கவும், தான் அவைகளுக்குமுன் விர்த்தியாகிக்கொண்டு வருவதும் இஸ்லாமார்க்கமே என்பதற்கு இதன் கீழ்க்காட்டும் விஷயங்களே சாக்ஷியாம்.

"இஸ்லாமார்க்கத்தில் சாதிபேதமாவது உயர்வு தாழ்வாவது கிடையாது. இதன்றி, பகை விரோதம் தற்பெருமை சுயநயம் பாராட்டல் முதலிய தீயகுணங்கள் முற்றிலும் நீக்கப்பட்டிருக்கின்றன. இஸ்லாமார்க்கத்தில் இவை முற்றும் நீக்கப்பட்டிருப்பதால், அது மனிதர்களை ஒற்றுமைப்படுத்தும் மார்க்கமாயிருக்கிறது. உலகத்தில் கணக்கற்ற பொய்மதங்கள் காலத்துக்குக்காலம் எழும்பி சீக்கிரம் அழிநதுபோய்விட்டது இன்னும் இருக்கின்ற அநேக மார்க்கங்களும் அந்தந்த மார்க்கத்தாருடைய முழுமுயற்சியின் பேரிற்றான் நிலைத்திருக்கின்றன. ஆனல், இஸ்லாமார்க்கத்தைப்போல் யாதோருதவியும் முயற்சியுமில்லாது தானே விருத்தியாக்கிக் கொண்டுவரும் மார்க்கம் உலகத்தில் வேறெதுவு மில்லை என்பதை எவரும் ஒத்துக் கொள்ளவேண்டும். இதனாலேயே இஸ்லாமார்க்கம் உண்மையானதென்று விளங்கும்.

"இஸ்லா மார்க்கம் நபியவர்களால் வெளிப் பட்ட காலத்தில் அதற்குக் கொடிய இடையூறு செய்த அபூஜகில்என்பவனும் ஒருதடவை "இஸ்லகமார்க்கம் கடவுளால் கொடுக்கப்பட்ட உண்மையான மார்க்கமென்று நான் அறிந்திருக்கிறேன் அந்த மார்க்கத்தில் சேர்ந்து கொண்டால் என்னை ராஜாவாக்கி யிருக்கிற ஜனங்கள் என்னை நீக்கிவிடுவார்கள் இது எனக்குப் பிரியமில்லாததால் அதைப்பகைக்கிறேன்" என்றான் இன்னமும் இஸ்லாமார்க்கத்தை முழுதும் அழித்துவிட வேண்டுமென்று காலத்துக்குக்காலம்அநேகர் எழும்பி, கொடிய துன்பங்களைச் செய்தார்கள் அதனால் இஸ்லாமார்க்கம் சிறிதும் குன்றிப்போகாமல் சுடச்சுடரும் பொன் போலவும், சங்கு சுட்டாலும் வெண்மைதருவது போலவும் அதிக விருத்தியாகிக்கொண்டே வந்தது.

"அன்றியும் கி. பி. 1502-ம் வருடம் போர்த்துக்கல் தேசத்து ராஜாவாகிய பிரடினுண்டு என்பவன் தன் தேசத்தில் நெடுநாளாய்க் குடியிருந்து வந்த முப்பது லட்சம் இஸ்லாமானவர்களை நோக்கி அவர்கள் கிறிஸ்துமார்க்கத்தில் உடனே நேர்ந்து கொள்ளவேணுமென்றும், அப்படிச் சேராவிட்டால் சகல சொத்தையும் இழந்து ஊரைவிட்டுப்போய்விட வேண்டு மென்றும், கிறிஸ்துமார்க்கத்தில் சேராமலிருந்தாலும், அல்லது சொத்துக்களை எடுத்துக்கொண்டு போகிறதாயிருந்தாலும், சங்காரம் செய்யப்படுவார்க ளென்றும் கட்டளை யிட்டான். அதற்கு இஸ்லாமானவர்கள் கிறிஸ்துமார்க்கத்தில் சேர்ந்து கொள்ளப் பிரியமில்லை யென்றும் ஊரைவிட்டுப் போய்விடுவதாயும் சொன்னார்கள். அதன்பேரில் மேற்கண்ட முப்பது லட்சம் ஜனங்களுடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்துகொண்டு ஊரைவிட்டு அவர்களைத்துரத்தினன். பசியினல் ஆயிரக்கணக்காய் அவர்களில் பலர் மடிந்துபோனர்கள். அவர்கள் கைக்கொண்டிருந்த இஸ்லாமார்க்கத்திற்காகத் தங்கள் பொருள்களைப் பறிகொடுத்ததோடு உயிரையும் இழந்தார்கள். இப்படி உயிரையும் பொருளையும் இழக்கப்பிரியப் பட்டார்களேயொழிய ஒருவராவது மார்க்கத்தை இழக்கப் பிரியப்படவில்லை. இதனுல் இஸ்லாமார்க்கத்தின் மேன்மையை அறிந்து கொள்ளலாம்.

"இதுவுமன்றி ஆபிரிகா கண்டத்திலுள்ள பற்பல ஊர்களில் கிறிஸ்துவர்கள் தங்கள் மார்க்கத்தைப் பரவச் செய்ய எடுத்த முயற்சியும் பணச் செலவும் கொஞ்சமல்ல அப்படி யிருந்தும் யாதொரு முயற்சியும், போதனையும் பணச் செலவு மிலலாமலே அங்கே பரவிக்கொண்டு வரும் இஸ்லாமார்க்க விருத்தியை நோக்கத் தங்கள் பயன் அதிகக் கொஞ்ச மென்று கிறிஸ்தவர்களே ஒத்துக்கொள்ளுகிறுர்கள். கொஞ்ச காலத்துக்குமுன் பிராஞ்சுதேசத்தில் கூடிய கிறிஸ்தவக் கூட்டத்தில் ஒரு பாதிரியார் நம் மார்க்கத்தை உலகத்திற் பரவச்செய்யக் கணக்கற்ற பணங்களையும் கொடிய துன்பங்களையும் அநேக உயிர்களையும் பலிகொடுத்து அதனுல் நம்மார்க்கம் விருத்தியடைந்து வருவதிலும், யாதொரு பிரயாசையும் போதனையும் பொருள் விரயமு மில்லாது இஸ்லா மார்க்கம் அதிகமாய்ப் பரவிவருகிறதைப் பார்க்க விசனகரமா யிருக்கிறதென்முர்.

"இன்னமும் சீனதேசத்திற் கிறிஸ்தவர்கள் காலத்துக்குக் காலம் தங்கள் மார்க்கத்தைப் பரவச்செய்யப் பிரயாசை எடுப்பதும் அதைக்கண்டு அங்குள்ளோர் இவர்களைச் சங்காரஞ் செய்ய முயல்வதும் இஸ்லாமார்க்கம் யாதொரு தடையுமின்றி அங்கே பரவிக்கொண்டு வருவதும் இப்போது அது ஏழுகோடி முஸ்லிம்களை உடைய பெரிய ராஜ்யமாக விருப்பதும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே."

ருஷியாவில் 1906ல் மார்க்க சுயாட்சி சோடுத்தவுடன் அங்குள்ளவர்கள் முஸ்லீமான மகிமை.

1906-ம் வருஷம் மேமீ த்தில் 1800 எகூதிகள் ரஜலா நகரத்தில் இஸ்லாமானுர்கள். "லிவாவுல் இஸலாம் 4-4-1906.

இன்னும் 1906 ஹூ ஏப்ரல் மீ த்தில் ருஷியாவிலுள்ள காசான் சம்பர்க்வலி என்னும் நகரில் 50000 ஐம்பதிஞ்பிரம் கிறிஸ்தவர்கள் திடீரென்று இஸ்லாமாகி இராஜாங்கத்து தப்தரிலும் அவர்களை முஸ்லீம்களென்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் மேற்படி ருஷியாவில் ஹவாஜன்ஜர்ஜனீ என்றும் ஜாதியார் 1500000 பதினைநது லட்சம் பேர் இஸ்லாமாயிருக்கிறுர்கள்.

இன்னும் பர்ருவியா பட்டணத்தில லட்சம் கிறிஸ்தவர்கள் ஆர்தோடாக்ஸ் எனனும் மார்க்கத்தை விட்டுவிட்டு கதம்தாலிக் மார்க்கத்தில் சேர்நதிருந் தாாகள். இப்போது அவாகளெல்லோரும் இஸ்லாம் மாாககத்தில் சேர்ந்து விட்டார்க ளென்று 1906ஹூ மேமீ 27உ "அலலிவா" கூறுகிறது.

இன்னும் கஞ்சாவென்னும் நகரத்தில் அர்மேனியா பெரிய கூட்டம இஸ்லாமானுர்கள். மற்றகூட்டங்களும் இஸ்லாமய்க் கொண்டே வருகிறுர்கள. என்று "காசான முக்குபிறி" கூறுகிறதாக 1906ஹூஜுன்மீ 28உ "லிவாவுல் இஸ்லாம்" கூறுகிறது.

இன்னும் ருஷியாவிலுள்ள ஜங்தூரி என்னும் நகரத்தில் 1845ஹூத்தில் பலாக்கிரமமாய் முஸ்லீங்களை கிறிஸ்தவர்களாக்கப்பட்டிருநதது. இப்போது ஒஷியார் அடங்கலும் கவர்ன்மெண்டார் அனுமதிபெற்று முஸ்லீம் ஆய்விட்டார்களென்று "தர்ஜுமான்" பததிரிகை கூறுவதாக ஜுன்மீ 28உ "லிவாவுல் இஸ்லாம்" கூறுகிறது.

இன்னும் காஸ்கிஸ் கிறிஸ்தவ ஜாதியார் கும்பல் கும்பலாக இஸ்லாமாய்க்கொண்டு வருகிறார்களென்று ஓரன்பெர்க்கிலிருந்து சமாச்சாரம் எட்டியிருப்பதாக "உல்பத்" பத்திரிகை கூறுகிறதென்று 1906வருஷம் ஜுலைமீ 5ௌ "லிவாவுல் இஸ்லாம்" வெளியிட்டிருக்கிறது.

இன்னும் ருஷியாவிலுள்ள அபூக்கா என்னும் ஜில்லாவைச் சேர்ந்த கோகதியென்னும் ஊரில் 959 கிறிஸ்தவர்கள் இஸ்லாமாயிருக்கிறார்களென்று "பேரூத்துஷாம்" பத்திரிகை கூறுகிறதாக ஜுலைமீ 12ௌ "லிவாவுல் இஸ்லாம்" கூறுகிறது.

இன்னும் அமெரிக்காவில் இராக்கில்பர்க் என்னும் நகரத்தில் 6000 பேர் முஸ்லிமா யிருக்கிறார்களென்று ஜுலைமீ 12ௌ "லிவாவுல் இஸ்லாம்" வெளியாக்கி யிருக்கின்றது.

இன்னும் ருஷியா இலாக்காவில் 450 பேர்களும் அங்குள்ள ஜோபந்திஎன்னும் கிராமத்தில் 400 போகளும், கார்லி என்னும் நகரத்தில் 90 பேர்களும் இஸ்லாமொ யிருக்கிறார்களென்று "தர்ஜுமான் "பத்திரிகை கூறுகிறதாக ஜுலைமீ 19ௌ "லிவாவுல் இஸ்லாம்" கூறுகிறது.

இன்னும் ருஷியாவில் ஆஸ்டர்ஹான் மாகாணத்தைச் சேர்ந்த சபோலின் நகரத்தார் அடங்கலும் முஸ்லீம் ஆய்விட்டார்கள் என்று "க்ரசென்ட் அல்ஹிலால்" பத்திரிகை கூறுகிறதென்றும் இன்னும் அங்குள்ள ஓரன்பர்க் என்னும் பட்டணத்தில் வசிக்கும் எல்லா கிறிஸ்துவர்களும் இஸ்லாமாய் விட்டார்களென்றும் 12-7-1906 "லிவாவுல் இஸ்லாம்" கூறுகிறது.

இன்னும் ருஷியாவிலுள்ள நஸ்மா என்னும் பட்டணத்தில் பல வந்தமாய் 400 முஸ்லீம்களை கிறிஸ்தவர்களாக்கப் பட்டிருந்தது அவர்கள் அடங்கலும் இப்போது முஸ்லிம்களாய் விட்டார்களென்று 1906ஹு ஆகஸ்டுமீ 9ௌ "லிவாவுல் இஸ்வாம்" கூறுகிறது.

இன்னும் ருஷியாவிலுள்ள ஒளபா இலாக்காவைச்சேர்ந்த மஜூசிகள் வசிக்கிற ஆற்கற்ஜா நகரத்தில் ஆணும் பெண்ணுமாக ரண்டுலட்சத்தி ஐயாயிரம்பேர் முஸ்லிமாயிருக்கிறார்களென்று காசான்முக்பிறி" கூறுகிறதாக 4-8-1906 "அல்லிவா" கூறுகின்றது.

இன்னும் ருஷியாவிலுள்ள ஙிஸூம்கா என்னும் பட்டணத்தில் 171 காலிக் ஜாதியாரும் ஔபாநகரத்தில் 542 கிறிஸ்தவர்களும் இஸ்லாமாயிருக்கிறூர்களென்று 9-8-1906 "மஹம்மடன்" கூறுகின்றது.

இன்னும் தீஸ்மக்கா நகரத்தில் வசிக்கும் கூவாக்கி ஜாதியாரிலிருந்து 271 பேர்களும் ஔபா இலாக்காவைச் சேர்ந்த சுவைது நகரத்தில் வசிக்கும் முத்தவத்தினீன்களிலிருந்து 542 பேர்களும் இஸ்லாமா யிருக்கிறூர்ளென்று 29-7-1906ல் "அல்லிவா" கூறுகின்றது.

இன்னும் ருஷியாவிலுள்ள காசான் ஔபா சீம்பர்க் முதலிய இலாக்காக்களில் வசிக்கிற பத்து லட்சம் மஜூஸிகள் முஸ்லிம் ஆய்விட்டார்களென்று ஆகஸ்டு 1906 "அல்லிவா" கூறுகின்றது.

இன்னும் ருஷியாவிலுள்ள பாய்த்தீஸ் என்னும் பட்டணத்தில் காஸ் சைனியத்திலுள்ள 519-முஸ்லிம்களை பலவந்தமாய் கிறிஸ்தவர்களாக்கப்பட்டிருந்தது அவர்கள் அடங்கலும் இப்போது இஸ்லாமாய் விட்டார்களென்று "காசான் முக்பிறி" கூறுகிறதாக 6-9-1906-ல் "லிவாவுல் இஸ்லாம்" பத்திரிகைகூறுகிறது.

இன்னும் ருஷியாவிலுள்ள மகவாசன் ஜர்ணி என்னும் ஜாதியார் பதினஞ்சு (15) லட்சம் பேர் முஸ்லிமாயிருக்கிறூர்களென்று செப்டெம்பர்மாதத்தில் வெளியான லாகூர் "வத்தன்" பத்திரிகை கூறுகிறது.

இன்னும் ருஷியாவிலுள்ள சாஷ்டோபிலேச்சேர்ந்த இஸ்லில்யாரில் வசிக்கும் குடிகளில் சுமார் 400 குடும்பத்தார் முஸ்லீமா யிருக்கிறூர்களென்று 1906ஹு செப்டம்பர்மீ 20உ "லிவாவும் இஸ்லாம்" பத்திரிகை கூறுகின்றது.

இன்னும் ருஷியாவிலுள்ள காசன் பகுதியைச் சேர்ந்த ஜூக்குறி நகரத்திலுள்ள சீக்கஸ் ஜாதியில் 236 பேர்கள் முஸ்லிமா யிருக்கிறூர்களென்று "காசான் முக்பறி" கூறுகின்றது.

இன்னும் லாகூரிலுள்ள ராதாகிருஷ்ணகோர்ட் என்னும் தலத்தில் 1906ஹு செப்டம்பர்மீ 30உ 240 கிறிஸ்தவர்கள் முஸ்லீமாயிருக்கிறூர்களென்று "முக்பிறி தக்கனும்" ருஷியாவி

னுள்ள கீலஷ் இலாக்காவில் 263 மஜூசிகள் முஸ்லிமா யிருக்கிறார்களென்று "அல்ஹாமியும்" ருஷியாவிலுள்ள கப்காவஸியா பட்டணத்தில் ஒரு பெரிய ருஷியா சேனாதிபதி இஸ்லாமாய் விட்டாரென்று "அல்முஅய்யிது" பத்திரிகை கூறுகிறதென்று 25-10-1906 "லிவாவுல் இஸ்லாம்" கூறுகின்றது.

இன்னும் இதைப்பற்றி எழுதவேண்டுமானால் எழுத முடியாதென்று இம்மட்டில் நிறுத்தப்பட்டது. ஆப்பிரிக்கா, சைனா, ருஷியா ஜப்பான் முதலிய இராஜ்யங்களில் யாதொரு தூண்டுதலில்லாமல் இஸ்லாம் மார்க்கம் நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வருவதால் அதின்பெருமையும் மகிமையும் சிறப்பும் நாம் சொல்லாமலே ஒவ்வொருவருக்கும் நன்குவிளங்கும்.

ஆகையால் அல்லாஹுத்தஆலாநம்மனைவர்களையும்இப்பேர் கொத்த சிறந்த சன்மார்க்கமாகிய இஸ்லாத்தில்சேர்த்துவைத்து அதின் பவ்சு பாக்கியங்களை பெற்றுக்கொண்ட "மூமீன்காமில்" கூட்டத்தில் சேர்த்து வைத்தருள் புரிவானாக ஆமீன் ஆமீன் யாரப்பில் ஆலமீன்.

## இப்புஸ்தகத்தை கோர்வை செய்தவரின் வேண்டுதல் முக்கியகவனிப்பு.

இப்புஸ்தகத்தை பார்வையிடும் கனவான்கள் இதில் ஏதாகிலும் தவருதலை கண்டால் அதனை சரியான முன்னூல்களை கொண்டு திருத்திக்கொள்ளவேணுமென்றும் இந்த மிஸ்கீனுடைய ஹக்கில் துஆசெய்யவேணுமென்றும் அவர்களின் அரிதான கனத்தை மிகப் பெரிதாக விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நாயன் கிருபையால் இஸ்லாத்தின் மகிமை முற்றிபெற்றது.